# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை

| மலர் 27 | ஏப்ரல் 1965 | இதழ் 4 |
|---|---|---|

## அந்தப் பள்ளிக்கூடங்கள் மட்டுமல்ல ! இந்தப் பள்ளிக்கூடங்களும் தேவை !!

தமிழ் நாட்டில் தற்போது 30,200 தொடக்கப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் 45 பள்ளிக்கூடங்களில் மட்டும்தான் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஏனைய பள்ளிக்கூடங்கள் யாவற்றிலும் கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது.

அதுபோலவே தமிழ்நாட்டில் தற்போது உள்ள 4000 உயர் தொடக்கப் பள்ளிகளில் 300 பள்ளிக்கூடங்களில் மட்டுமே கட்டண வசூல் இருக்கிறது. பிற பள்ளிக்கூடங்கள் யாவும் இலவசக் கல்வியை அளிப்பனவே ஆகும்.

பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படும்போது ஒரு சில பள்ளிக்கூடங்களில் மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுவது, முன்னுக்குப்பின் முரணான ஒரு நிலைமை அல்லவா என்றும், இத்தகைய நிலைமை

யை அகற்ற ஆட்சியாளர்கள் யாது செய்ய இருக்கிறார்கள் என்றும், சில நாட்களுக்கு முன்னர், தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில், சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அக் கேள்விகளுக்கு விடைதர எழுந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள், அவ்வாறு கட்டணம் வசூலித்து வருகிற பள்ளிக்கூடங்களிலும் அடுத்த கல்வியாண்டிலிருந்து இலவசக் கல்வியைக் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்றைக் கல்வித்துறை இயக்குநர் அவர்கள் தீட்டியிருப்பதாகவும், அத் திட்டம் அரசினரின் பரிசீலனையில் இருப்பதாகவும், விரைவில் இது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

கட்டணம் வசூலித்து வருகிற ஒரு சில பள்ளிக்கூடங்களையும் இலவசக் கல்வி என்கிற திட்டத்தின் கீழ் இழுத்து வந்து பிணைக்க வேண்டிய அவசியம் என்ன என்பது, நமக்கு விளங்கவில்லை.

எங்கெந்தப் பள்ளிக்கூடங்கள் கட்டணம் வசூலிக்கவில்லையோ, அவற்றிற்கு மட்டும்தான் அரசாங்க மானியம் உண்டு.

எங்கெந்தப் பள்ளிக்கூடங்கள் கட்டணம் வசூலிக்கின்றனவோ, அவற்றிற்கு அரசாங்க மானியம் கிடையாது. அத்தகைய பள்ளிக்கூடங்கள், மாணவர்களிடமிருந்து திரட்டுகின்ற கட்டணத் தொகை ஒன்றைக்கொண்டுதான், ஆசிரியர்களுக்குத் தருகின்ற ஊதியம்—பள்ளிக் கட்டட வாடகை ஆகிய செலவுகள் உட்பட எல்லாச் செலவுகளையும் ஈடுகட்டியாகவேண்டும். இத்தகைய நிலைமையில், மாணவர்களிடமிருந்து வசூலிக்கிற கட்டணங்கள் சற்று கூடுதலாக இருப்பது இயற்கை. அப்படிக் கூடுதலாக இருந்தால்தான், அந்தத் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடங்களைச் சீரும் சிறப்பும் பொருந்திய முறையில் நடத்திச் செல்ல முடியும்.

ஏனைய பள்ளிக்கூடங்கள் யாவற்றிலும் கல்வி இலவசம்—ஆனால் இந்தப் பள்ளிக்கூடங்களிலோ கல்விக்குக் கட்டணம் உண்டு—அந்தக் கட்டணமும் சற்று கூடுதலாகத்தான் இருக்கும் என்கிற நிலை—இத்தகைய சூழ்நிலையிலும் இந்தப் பள்ளிக்கூடங்கள் எழிலும் ஏற்றமும் பொருந்திய முறையில் நடைபெற்று வருகின்றன என்பதைப் பார்க்கும்போது, இத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு இந்த நாட்டில் ஒரு தேவை இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக' விளங்குகிற இலவசப் பள்ளிக்கூடங்களை விட்டுவிட்டு, கட்டணம் வசூலிக்கிற இந்தப் பள்ளிக்கூடங்களையே சில பெற்றோர்கள் தேடிப் பிடித்து, இவற்றிடமே தங்கள் குழந்தைச் செல்வங்களை ஒப்படைக்கிறார்கள்

என்றால், என்ன பொருள் அதற்கு ? இலவசப் பள்ளிக்கூடங்களில் தரப்படுகிற கல்வியின் தரத்தைவிட இந்தப் பள்ளிக்கூடங்களில் தரப் படுகின்ற கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள் என்று பொருள். தமிழ்நாட்டின் கல்வி உலகத்தில் இத்தகைய பள்ளிக்கூடங்கள் ஒரு சிலவேனும் இருந்தாகவேண்டிய அவசியம் இருக்கிறது என்று பொருள். தொடக்கக் கல்வியின் வளர்ச்சி விரைவானதாக மட்டும் இல்லாமல் தரம் மிகுந்ததாகவும் இருக்கவேண்டும் என்று பொருள். கல்வியின் சீரான வளர்ச்சியில் இத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு ஒரு சிறப்பான பங்கு உண்டு என்று பொருள்.

எத்தனை முறை எண்ணிப் பார்த்தாலும் சரி, இத்தகைய கட்டண வசூல் பள்ளிகள்மீது இலவசக் கல்வி என்கிற திட்டத்தை, வலுக் கட்டாயமாகத் திணிக்கவேண்டிய அவசியம் துளியும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

**தொடக்கப் பள்ளிக்கூடங்களில் இலவசக் கல்வி அளிக்கப்படுவதே தவறு என்று நாம் கூறவில்லை. தொடக்கப் பள்ளிக்கூடங்கள் அத்தனையிலும் இலவசக் கல்வி மட்டுமே அளிக்கப்படவேண்டும் என்று எண்ணுவது தவறு என்றுதான் நாம் கூறுகிறோம்.**

ஏழைகளாக உள்ள பெற்றோர்கள், பண வசதி இல்லாத காரணத்தால் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாமல் வேதனைப்படுகிற விபரீத நிலை இருத்தல் ஆகாது—என்பதுதான், இலவசக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும்.

இந்த நோக்கம், ஒப்பு உயர்வு அற்றது; உன்னதமானது; அப்பழுக்கு இல்லாதது; அனைவராலும் ஏற்கப்படவேண்டியது. ஆம்! இது உண்மை. இந்த உண்மையை எவரும் மறுக்க மாட்டார்கள்.

ஏழைப் பிள்ளைகள் இலவசமாகப் படிப்பதற்குத் தேவையான அளவு, இலவசப் பள்ளிகள் இருந்தாக வேண்டும். அத்தகைய பள்ளிக்கூடங்கள், தேவையான அளவிலோ, தேவையான இடத்திலோ, இல்லாமலிருந்தால், அது தவறு; குற்றம்; பிழை. அத்தகைய பிழையை உடனடியாகத் திருத்தியாக வேண்டும். அத்தகைய பள்ளிக்கூடங்களைத் தேவையான எண்ணிக்கையிலும், தேவையான இடத்திலும் தொடங்கி நடத்துவது, ஆட்சியாளரின் முதற் பெரும் கடமை.

ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தற்போது இத்தகைய வருந்தத்தக்க நிலைமை இல்லை. இலவசமாகக் கல்வியை அளிக்கின்ற

பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருக்கின்றன. தேவையான அளவிலும், தேவையான இடங்களிலும், தேவையான முறையிலும் அவை அமைந்துள்ளன. தங்கள் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி தேவை என்று கருதுகிற எந்தப் பெற்றோரும் அத்தகைய கல்வியைத் தற்போது எளிதில் பெற முடிகிறது. எவரும் ஏற்கத்தக்க உண்மை இது.

ஒருவேளை, எவையேனும் சில ஊர்களில், அத்தகைய பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாமலிருந்தால், மேலும் மேலும் அத்தகைய இலவசப் பள்ளிகளை ஆட்சியாளர்கள் தாராளமாகத் தொடங்கட்டும். வேண்டாம் என்று கூறவில்லை நாம். மற்றவர்களும் கூறமாட்டார்கள் அவ்வாறு.

நாம் கூற விரும்புவதெல்லாம் இதுதான் :

ஆங்காங்கே சில பெற்றோர்கள் இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளின் கல்விக்குக் கட்டணம் அளிக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இலவசமாகக் கல்வியை அளிக்கின்ற பள்ளிக்கூடங்கள் பக்கத்திலேயே இருந்தாலும், தங்கள் பிள்ளைகளை அவற்றிற்கு அனுப்பாமல், கட்டணம் வசூலிக்கிற பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே அனுப்ப விரும்புகிறார்கள். கட்டணம் தருவதற்குத் தேவையான வசதி அவர்களிடம் இருக்கிறது. இத்தகைய நிலையில், இத்தகைய பெற்றோர்கள், தாங்களாக முன் வந்து கட்டணம் தருவதை எதற்காகத் தடுக்கவேண்டும்? இதுதான் நம்முடைய கேள்வி.

இந்தக் கேள்விக்கு, இதுவரை, நமக்குத் தெரிந்த அளவில், பொருத்தமான விடை எதையும் யாரும் அளிக்கவில்லை.

நாம் அறிந்தவரை இந்தக் கேள்விக்கு இதுவரை ஒரே ஒரு விடைதான் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விடை, பொருத்தமான விடை அன்று.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் அனைத்திலும் இலவசக் கல்வி மட்டுமே அளிக்கப்படவேண்டும் என்று ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். அப்படி இருக்கும்போது, தொடக்கப் பள்ளிகளில் சிலவற்றிற்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் உரிமையைத் தருவது, விசித்திரமான ஒரு நிலைமையாகக் காணப்படுகிறது. இந்த விபரீத முரண்பாடு போக்கப்படவேண்டும் என்பதுதான் அந்த விடை.

இந்த விடை, பொருத்தமற்றது—பொருளற்றது—தேவையற்றது—தெளிவும் அற்றது என்பது, வெள்ளிடைமலை.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் எவையேனும், மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்து—ஆனால் அரசாங்க மானியத்தை எதிர்பாராமல், கல்வியை அளிக்க விரும்பினால், அவற்றிற்கு அந்த உரிமையை அளிப்பதுதான் நியாயம். அதுதான் முறை. அதுதான் அறிவுடைமை.

என்ன காரணத்தாலோ, தமிழ்நாட்டு அரசாங்கம், உயர்நிலைப் பள்ளிகளுக்கு அத்தகைய உரிமையை அளிக்கவில்லை. அளிக்காதது, தவறு.

ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை அரசாங்கம் இந்தத் தவற்றைச் செய்துவிட்ட காரணத்தால், இதே தவற்றை, தொடக்கப்பள்ளிக் கட்டத்திலும் அரசாங்கம் செய்துதான் ஆக வேண்டும் என்று வற்புறுத்துவது எப்படி நியாயமான செயலாகும்?

ஒரு தவறு, இன்னொரு தவறுக்கு வழி வகுப்பதா?

ஒரு தவறு, மற்றொரு தவறுக்கான சமாதானமா?

ஒரு கட்டத்தில் தவறு இழைத்துவிட்ட காரணத்தால் மற்றொரு கட்டத்திலும் தவற்றை இழைத்துத்தான் ஆகவேண்டுமா?

ஒரு மாணவன், ஒரு கணக்கைத் தவறாகப் போட்டுவிட்டால், அதற்காக, அதன் பின் போடுகிற ஒவ்வொரு கணக்கையும் தவறாகப் போடவேண்டுமா? அப்படித் தொடர்ந்து தவறாகப் போட்டுக் கொண்டிருப்பதுதான் நியாயம் என்று ஒருவர் வாதாடினால், அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா?

உயர்நிலைப் பள்ளிக் கட்டத்தில் ஓர் உரிமை தரப்பட்டிருக்க வேண்டும்—ஆனால் தரப்படவில்லை—ஆகவே அந்த உரிமையைத் தொடக்கப்பள்ளிக் கட்டத்தில் மட்டும் ஏன் தரவேண்டும் என்று கேட்பது, முறையற்ற கேள்வி; ஒழுங்கற்ற வாதம்.

அப்படிப்பட்ட ஒரு நடைமுறை இருப்பது, முன்னுக்குப் பின் முரணான ஒரு நிலைமைதான். ஆனால் இந்த முரண்பாட்டைப் போக்குவதற்கான வழி, உயர்நிலைப் பள்ளிக் கட்டத்திலும், கட்டணம் வசூலிக்கிற உரிமையை வழங்குவதுதானே தவிர, தொடக்கப் பள்ளிக் கட்டத்திலிருந்து அந்த உரிமையைப் பறித்து விடுவது அல்ல.

கட்டணம் வசூலித்து வருகிற தொடக்கப் பள்ளிகளையும் உயர் தொடக்கப் பள்ளிகளையும் தொடர்ந்து அவ்வாறே செய்துவர அனுமதி தருவதுதான் நியாயம் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

கட்டணம் வசூலிக்கிற பள்ளிக்கூடங்கள் ஒரு சில இருக்கின்ற காரணத்தால், அந்தப் பள்ளிக்கூடங்களில் மட்டுமல்ல, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், கல்வியின் தரம் உயர்கிறது. அத்தகைய பள்ளிக்கூடங்கள் தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்பதற்கான ஒரு காரணம் இது.

ஏனைய பள்ளிக்கூடங்கள் யாவும் இலவசமாகக் கல்வியை அளிக்கின்ற சூழ்நிலையில், கட்டணம் வசூலிக்கின்ற பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படுகின்ற கல்வியின் தரம், பிற பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படுகின்ற கல்வியின் தரத்தைவிட மிக உயர்ந்ததாக இருந்தால் தான், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவார்கள். அப்படியில்லாமல், இலவசப் பள்ளிகளில் காணப்படுகிற அதே கல்வித் தரம் அல்லது அதைவிட மட்டமான கல்வித் தரம் இந்தப் பள்ளிகளில் இருக்குமானால், இந்தப் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப எந்தப் பெற்றோர்தான் முன் வருவர்?

இந்த அடிப்படை உண்மையை இத்தகைய பள்ளிக்கூடங்களை நடத்தும் நிர்வாகிகள் மிக நன்றாக அறிவார்கள். அறிந்த காரணத்தால், தங்கள் பள்ளிகளில் தரப்படுகிற கல்வியின் தரம் மிக உயர்ந்ததாக இருப்பதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அவர்கள் எப்போதும் செய்தபடி இருப்பார்கள்.

ஒரே வாக்கியத்தில் கூறவேண்டுமானால், மிக உயர்ந்த கல்வித் தரத்தோடு இருந்தால்தான் கட்டண வசூல் பள்ளிகள் வாழமுடியும். எனவே அங்கே கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அதுமட்டும் அன்று. கட்டணப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்ந்ததாக இருப்பதைப் பார்க்கிற இலவசப் பள்ளிகள், தங்களிடமும் அதே வகைத் தரம் மிளிர்வதற்கு உரிய முயற்சிகளில் ஈடுபடும். அப்படி அவை ஈடுபடுவதற்கு உரிய ஒரு தூண்டுகோலாக—ஒரு முன் மாதிரியாக—ஓர் எடுத்துக் காட்டு நிலையமாகக் கட்டணப் பள்ளிகள் விளங்கும். இந்த முறையில் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் கல்வியின் தரம் உயர்வதற்கு இத்தகைய பள்ளிகள் தொடர்ந்து இருந்தாகவேண்டும் என்பது, தெளிவாகத் தெரிகிற ஓர் உண்மை.

இத்தகைய கட்டணப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் எத்தகைய மானியமும் தருவதில்லை. எனவே இவற்றின் காரணமாக அரசாங்கத்திற்கு எத்தகைய செலவும் ஏற்படுவதில்லை. ஆனால் இதே பள்ளிக்கூடங்களை இலவசப் பள்ளிக்கூடங்களாக மாற்றிவிட்டால், இவற்றின் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றாகவேண்டும். அந்தச் செலவுத்

தொகை முழுவதும் இப்போது மிச்சம்தானே? அப்படி மிச்சமாகிற தொகையைக்கொண்டு, தேவைப்படுகிற ஊர்களில், மேலும் பல இலவசப் பள்ளிகளை அரசாங்கம் தொடங்கலாம் அல்லவா? கட்டணப் பள்ளிகள் தொடர்ந்து இருப்பதுதான் நியாயம் என்பதற்கான இரண்டாவது காரணம் இது.

நாம் எடுத்துக் காட்டியுள்ள இந்த உண்மைகளையெல்லாம், சிறப்பும் செல்வாக்கும் மிக்க நாளிதழாகிய **"தினமணி"**, தன் 1-4-65 இதழின் தலையங்கத்தில், அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டியிருக்கிறது என்பது, நம் இதயத்திற்கு இன்பத் தென்றலாக இனிக்கிறது.

"தினமணி" பத்திரிகை தீட்டியுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதி இது:—

"பொருள் வசதி இல்லாததால் யாரும் படிக்கமுடியாத நிலை இருக்கக்கூடாது என்பது உண்மையே. இலவசக் கல்விக்கு வழி செய்வதன் நோக்கம் அதுவே. அதற்கு வசதி செய்து கொடுத்து விட்ட பிறகு, சம்பளம் வசூலித்து நடத்தும் பள்ளிக்கூடங்களை எல்லாக் கட்டங்களிலும் அனுமதிப்பதுதான் நியாயம். சம்பளம் கொடுக்கக்கூடியவர்கள் கொடுக்கட்டுமே? சிறிது தியாகம் செய்தாவது, போதனை நன்றாக நடைபெறும் பள்ளிகளில் தமது குழந்தைகளைச் சம்பளம் கொடுத்துப் படிக்க வைக்கப் பெற்றோர் விரும்பினால், அரசாங்கம் ஏன் அதற்குக் குறுக்கே நிற்கவேண்டும்? ஒரு தவற்றை இழைத்துவிட்டால் அதைத் திருத்திக் கொள்வதுதான் நியாயம். தொடர்ந்து புதுத் தவறுகளை இழைத்துக்கொண்டே போவது அறிவுடைமை ஆகாது."

இதைவிடத் தெள்ளத் தெளிவாகக் கட்டணப் பள்ளிக்கூடங்களைப் பற்றிய பிரச்சினையை எப்படி விளக்க முடியும்?

அருள்கூர்ந்து ஆட்சியாளர்கள் இந்த உண்மைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, கட்டணப் பள்ளிக்கூடங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான சூழ்நிலையை அமைத்துத் தரவேண்டும் என்பதுதான் நம்முடைய பணிவான வேண்டுகோள்.

இலவசப் பள்ளிக்கூடங்கள் மட்டுமல்ல, கட்டணப் பள்ளிக்கூடங்கள் கூட நாட்டிற்குத் தேவைப்படுகின்றன என்பதை ஆட்சித் தலைவர்கள் உணரவேண்டியது இன்றியமையாதது. இலவசப் பள்ளிகள், ஏராளமாக—மிக ஏராளமாக-பல்லாயிரக் கணக்கில் இருக்கட்டும். தேவையில்லை என்று நாம் கூறவில்லை. ஆனால், கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் சிலவேனும் இருக்கத்தான் வேண்டும் என்பதையும், அவற்றிற்குத் தேவையான அனுமதியை அரசாங்கம் தரத்தான் வேண்டும் என்பதையும் நாம் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

# இராஜஸ்தான் வழிகாட்டுகிறது!

## சென்னையும் டில்லியும் பின்பற்றுமா?

இராஜஸ்தான் மாநில அரசாங்கம் புதிய ஒரு பாதையில் நடைபோடத் தொடங்கியிருக்கிறது.

அந்தப் பாதை, அறிவுலக மேதைகள் அனைவராலும் போற்றிப் புகழப்பட வேண்டிய பாதை; நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டம் உடைய யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாதை; மக்களாட்சிக் கோட்பாடு என்னும் மாண்புமிக்க பயிர் நம் நாட்டில் செழித்து வளரவேண்டும் என்பதில் ஆர்வம் படைத்த அனைவராலும் ஆசையோடு ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய பாதை.

அந்தப் பாதை, ஆச்சரியம் நிறைந்த பாதை அல்ல — ஆனால் அவசியமான பாதை. மிகுந்த செலவை உடைய பாதை அல்ல — ஆனால் நிறைந்த பயனை அளிக்கவல்ல பாதை. மாபெரும் அளவில் அமைந்த மகத்தான பாதை அல்ல - ஆனால் மட்டற்ற நன்மை விளைக்கவல்ல மாண்புமிகு பாதை.

"இவ்வளவுதானா செய்தி? ஈது என்ன பிரமாதம்? இதற்கோ இத்துணைப் பாராட்டு?" என்றுதான் சொல்லத்தோன்றும் மேலோட்டமாகப் பார்க்கும்போது. ஆனால் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தாலோ, அருமையான விளைவுகளை அளிக்கவல்ல அற்புதமான ஒரு புதிய கண்ணோட்டத்தின் தொடக்கம் அது என்பது தெள்ளத் தெளிவாக விளக்கமாகும்.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது மாட்சிமை மிகுந்த ஓர் இல்லம் என்றால், அந்த இல்லத்திற்கு அமைந்த கதவு போன்றது எதிர்க்கட்சி.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது திண்மையும் வன்மையும் மிகுந்த ஒரு கதவு என்றால், அந்தக் கதவுக்கு அமைந்த தாழ்ப்பாள் போன்றது எதிர்க்கட்சி.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது அழுத்தமும் இறுக்கமுமாக அமைந்த ஒரு தாழ்ப்பாள் போன்றது என்றால், அந்தத் தாழ்ப்பாளுக்குப் போடப்படவேண்டிய பூட்டைப் போன்றது எதிர்க் கட்சி.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது வேகமாக ஓடிவருகிற ஒரு தேர் போன்றது என்றால், அந்தத் தேர் கண்ட திசைகளில் திரும்பிக்

கவிழ்ந்து விழாமல் இருப்பதற்காகப் போடப்படுகிற முட்டுக்கட்டை போன்றது, எதிர்க்கட்சி.

ஆற்றிற்குக் கரை தேவை. பூட்டுக்குச் சாவி தேவை. காருக்கு பிரேக் தேவை. அப்படித்தான், ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிர்க் கட்சியும் தேவை.

இந்த இன்றியமையாத உண்மையைத் திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக வீற்றிருப்பவருக்கு, காபினட் அமைச்சருக்கு எந்த அளவு ஊதியம் தரப்படுகிறதோ அந்த அளவு ஊதியம் தரப்படுகிறது. நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுள்ள ஒவ்வோர் அமைச்சருக்கும் எந்த அளவு சிறப்பும் செல்வாக்கும் மதிப்பும் மரியாதையும் தரப்படுகின்றனவோ அதே அளவு பெருமையும் உரிமையும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்த நாட்டில் தரப்படுகிறது.

இன்றைய எதிர்க் கட்சித் தலைவர், நாளையோ மறு நாளோ முதலமைச்சராக அமரக்கூடியவர். அது போலவே, இன்றைய முதலமைச்சர், வேறு ஒரு நாள், எதிர்க் கட்சித் தலைவராக மாறக்கூடியவர். ஆளும் கட்சி எதிர்க் கட்சியாக மாறுவதும், எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறுவதும், ஜனநாயக ஆட்சி முறையில், நிகழக் கூடிய செயல்கள் மட்டுமல்ல; நிகழவேண்டிய செயல்கள் ; நிகழ்ந்து வருகிற செயல்கள்.

சென்ற ஆண்டுக்குமுன், பிரிட்டிஷ் பேரரசில், கன்சர் வேடிவ் கட்சிதான் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தது. தொழிற் கட்சி, எதிர்க்கட்சி நாற்காலிகளில்தான் வீற்றிருந்தது.

ஆனால், இப்போதோ ?

தொழிற் கட்சி, ஆளும் கட்சி; கன்சர்வேடிவ் கட்சி, எதிர்க்கட்சி.

அடுத்த பொதுத் தேர்தலில்

யார் கண்டார்கள் ?

நிலைமை மீண்டும் தலைகீழாக மாறக்கூடும்.

ஆற்றங்கரையில் உருவாகிற மடு மேடாக மாறுவதும், மேடு மடுவாக மாறுவதும் அடிக்கடி நிகழ்கிற செயல்கள். ஆறிடு மடுவும் மேடும் போன்றதுதான் ஒருவரிடம் உள்ள செல்வம் என்றனர் தமிழகத்துச் சான்றோர்கள்.

ஆன்றோர் அளித்த இந்த அமுத வாக்கு, ஜனநாயக ஆட்சிமுறையின் அதிகார பீடத்திற்கும் பொருந்தும்.

இன்று ஒரு கட்சியிடம்; நாளை மற்றொரு கட்சியிடம் — என்று மாறுவது அதன் இயல்பு.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது ஓர் ஆலமரமானால் அந்த ஆலமரத்தின் ஆணிவேர் போன்றது, இந்த அடிப்படை உண்மை.

இந்த இன்றியமையாத உண்மையைத் தெள்ளத் தெளிவாக உணர்வதும், உணர்ந்து கொண்டதற்கு ஏற்ற முறையில் செயல்படுவதும், ஜனநாயக ஆலமரம் தழைத்துக் கிளைத்துச் செழித்துப் படர்வதற்குத் தேவைப்படுகிற மூலப் பொருள்கள் ஆகும்.

இந்த உண்மையைப் பிரிட்டிஷ் பேரரசும் பிரிட்டிஷ் அரசியல் உலகமும் மிக நன்றாக உணர்ந்திருக்கின்றன.

உணர்ந்திருக்கின்றன என்பதற்கான ஓர் அடையாளச் சின்னம் தான், ஓர் அமைச்சருக்கு உரிய அதே அளவு ஊதியத்தையும் மதிப்பையும் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவருக்கும் அளிக்க அந்த நாடு முன் வந்திருப்பது.

எதிர்க் கட்சிக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் போதிய அளவு மதிப்பையும் சிறப்பையும் அளிக்க வேண்டும் என்கிற பரந்த உள்ளம், இந்திய நாட்டில் உள்ள பல்வேறு அரசாங்கங்களில் ஆளும் பீடத்தில் உள்ளவர்களுக்குப் போதிய அளவில் ஏற்படவில்லை என்பதை நாம் வருத்தத்தோடு சுட்டிக் காட்டத்தான் வேண்டியிருக்கிறது.

எதிர்க் கட்சிக்கோ எதிர்க் கட்சித் தலைவருக்கோ மதிப்பை அளிப்பது, ஆளும் கட்சியின் மதிப்பைக் குறைத்துவிடக் கூடியது என்பதுபோன்ற ஒரு தவறான மனப்போக்கு இந்த நாட்டில் இன்னமும் இருந்து வருகிறது.

ஜனநாயக முறை ஓங்கி வளரவேண்டுமானால் இத்தகைய உள்ளப்போக்கு மாறியாக வேண்டும்.

மாறியாக வேண்டுமென்பதை, இராஜஸ்தான் மாநில அரசாங்கம், தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. அப்படி உணர்ந்ததை உடனடியாகச் செயல் உருவிலும் வடித்துக் காட்டியிருக்கிறது.

இராஜஸ்தான் மாநிலச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருக்கு இனி, ஓர் அமைச்சருக்குத் தரப்படுவதுபோன்ற வாடகையில்லாத மாளிகை ஒன்று, தேவையான எல்லா வசதிகளோடு

தரப்படவேண்டும் என்று, அந்த மாநில அரசு முடிவு செய்திருக்கிறது.

இராஜஸ்தான் மாநில அரசும் ஆளும் கட்சியும் காட்டியுள்ள இந்தத் தாராள மனப்போக்கு, ஜனநாயக ஆட்சிமுறையில் எதிர்க்கட்சிக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு என்பதை அவை மிக நன்றாக உணர்ந்திருப்பதற்கு உரிய அடையாளச் சின்னம் ஆகும்.

மனமாரப் பாராட்டுகிறோம்—இராஜஸ்தான் மாநில அரசாங்கத்தை.

இத்தகைய மனப்போக்குதான் வளரவேண்டும்—இந்த நாட்டில் ஜனநாயகக் கோட்பாடு பட்டொளி வீசித் திகழவேண்டுமானால்.

எதிர்க் கட்சித் தலைவருக்கு வாடகையில்லா மாளிகையைத் தர முன் வந்த இராஜஸ்தான் அரசாங்கம் தன் அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் தருகிற அளவு ஊதியத்தை அத் தலைவருக்கும் தர முன்வரவேண்டும்.

தருகிறார்கள் பிரிட்டிஷ் நாட்டில்.

தரக்கூடாதா நாமும்?

தரும் என்றே எதிர்பார்க்கிறோம் இராஜஸ்தான் அரசாங்கம்.

எதிர்க் கட்சித் தலைவருக்கு வாடகையில்லாத மாளிகையைத் தருவது என்கிற இராஜஸ்தான் பாதையை, சென்னையில் உள்ள தமிழக அரசும், டில்லியில் உள்ள இந்தியப் பேரரசும் உடனடியாகப் பின்பற்றவேண்டும் என்பது நம்முடைய பேராவல்.

இராஜஸ்தான் பாதையைப் பின்பற்றுவதால், தமிழக அரசுக்கோ, இந்திய அரசுக்கோ ஏற்படக்கூடிய கூடுதல் செலவு, மிக மிகக் குறைவு.

ஆனால் அத்தகைய செலவை ஆர்வத்தோடு ஏற்பதால் இந்த நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய உறுதுணை, மிக மிக அதிகம்.

தமிழக முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம், இந்தியத் தலைமையமைச்சர் திருவாளர் லால் பகதூர் சாஸ்திரி ஆகிய இருவரின் அன்புப் பார்வைக்கு "இராஜஸ்தான் பாதை"யை அடக்கத்தோடு சமர்ப்பிக்கின்றோம்.

இருவரையும் அழைக்கிறது "இராஜஸ்தான் பாதை"—அன்போடு, ஆர்வத்தோடு, துடிதுடிப்போடு, தூய நோக்கத்தோடு.

# அதிசயம்! ஆனால் உண்மை!

## ரூபாய்க்கு ஒரு கார்! வாஷிங்டனில் ஏலம் விடப்பட்டன.

வாஷிங்டன், பிப். 9—போன ஆண்டில் வாஷிங்டன் நகரில் தேவையற்றதாகக் கருதப்பட்டு கை கழுவப்பட்ட 10 ஆயிரம் கார்களைப் போலீசார் ஏலம் விட்டனர்.

இவற்றில் சில கார்கள், கார் ஒன்று 25 செண்டுக்குத்தான் (ஒரு ரூபாய் 18 பைசா) ஏலம் போயின.

## குடிகாரன் காரோட்டாமல் நிறுத்தும் கருவி

நியூயார்க், பிப். 24—குடி போதையேறிய ஒருவர், காரை ஸ்டார்ட் செய்வதைத் தடுக்கும் கருவியொன்று, பிட்ஸ்பர்க்கி லுள்ள கார்னகி தொழிலியல் நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காரில் ஒருவர் ஏறியதும் காரை இயக்கும் சாவியைத் திருப்பினாலும் கார் இயங்காது. எஞ்சினை இயக்குவதற்குப் போதிய அளவுக்கு அவரால் சாவியைத் திருப்ப முடியாததே அதற்குக் காரணம்.

நான்கு விநாடிகள் கழித்துச் சாவியை முற்றிலும் திருப்ப முடியும். அதன் பிறகு அது திருப்பப்படாவிட்டால், சாவியை எடுத்து விட்டு, மீண்டும் திருப்ப வேண்டும்.

காரோட்டுபவர் நன்றாகக் குடி குடித்திருந்தாரேயானால், போதிய வேகத்துடன் அவரால் சாவியைத் திருப்ப முடியாது. அதனால் எஞ்சின் வேலை செய்யாது என்று அந்தக் கருவியைக் கண்டு பிடித்தவர் கூறுகிறார்.

## நூதன தண்டனை

நியூயார்க், மார்ச். 26—மற்றொரு காருக்கு வழிவிட மறுத்ததற்காக அமெரிக்காவில் பிளாரிடா மாகாண மியாமி கோர்ட்டில் ஜேம்ஸ் தண்டிக்கப்பட்டார். அவர் ஒரு நாள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் அல்லது போன ஆண்டில் மியாமி நகர ரோடுகளில் நடந்த விபத்துக்களில் இறந்தவர்களின் பெயர்கள், விலாசங்கள் ஆகியவற்றை ஒரு தடவை வரிசையாக எழுதிக் காட்டவேண்டுமென்று அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

ஜோன்ஸ் இரண்டாவதாக கூறப்பட்ட தண்டனையை தேர்ந்தெடுத்து விபத்துக்களில் இறந்தவர்களின் பெயர்கள் விலாசங்கள் ஆகியவற்றை 177 வரிகளில் வரிசையாக எழுதிக் காட்டினார்.

## தண்ணீர் மீது நடக்கும் அதிசய மனிதன்

ஹாம்பர்க் (ஜெர்மனி) பிப். 26—நேற்று இங்கு ஒரு மனிதன் தண்ணீர் மீது நடந்தான்.

ஆல்ஸ்டர் ஆற்றின் தண்ணீர் மீது உல்லாச நடைபோட்டு

நடந்துகொண்டே அந்த மனிதன் பத்திரிகை படித்துக்கொண்டிருந் தான்.

இந்த அதிசயத்தை இரு கரை களிலிருந்தும் ஏராளமான ஜனங் கள் கண்டு களித்தனர்.

அந்த அதிசய மனிதரின் பெயர் ருடிகர் வேலெகர். அவர் தனது ஆராய்ச்சித் திறன் மூல மாகப் பல நூதனப் பொருள் களைக் கண்டு பிடித்திருக்கிறார்.

"செயற்கை நார்கள் மூலம் செய்யப்பட்ட பாதரட்சைகளை அணிந்து கொண்டுதான் தண்ணீர் மீது நடக்கிறேன். ராணுவத்தி னருக்கும் பாலம் கட்டுகிறவர் களுக்கும் தண்ணீரில் விழுந்தவர் களை மீட்பதற்கும் இந்தப் பாத ரக்ஷைகள் இன்றியமையாதவை" என்று ருடிகர் வேலெகர் கூறினார்.

தண்ணீர் மீது நடந்து ஆற் றைக் கடப்பதற்கு முன்பு, வேல கர் தனது சைக்கிள் பம்பை எடுத்துப் பாதரக்ஷைகளுக்குக் காற்று அடைத்தார். பிறகு பாத ரக்ஷைகளை அணிந்துகொண்டு அவர் தண்ணீரில் நடக்கலானார்.

## இப்படியும் ஒரு பந்தயம்

பெல்கிரேட், பிப். 23—இந்த நகரில் உள்ள ராஜ்கோமேடாஸிக் என்னும் தொழிலாளி ஓர் அலாதி யான மனிதர். அவர் தனது நண்பர் ஒருவரின் தலைமயிர்களை 74 நாள் இரவு பகலாக எண்ணி, மொத்தம் எத்தனை மயிர்கள் என்று கணக்குச் சொல்லிவிட் டார். 74 நாள் பொறுமையுடன் ஒரு மயிர்கூடவிடாமல் எண்ணிக் கணக்குச் செய்த அவர் ஒரு கணக்காகிவிட்டார். ஏதேனும் கணக்குப் போடாமல் இருந்தால் அவருடைய மனம் நிம்மதியாக இருக்க முடியாது.

மேற் கூறிய தொழிலாளி தனது நண்பரின் தலையில்


உருவாகி விட்டது!

விற்பனைக்குத் தயார்!!

RECORD SHEET IN TAMIL

**மாணவர் குறிப்பேடு**

**100 காப்பிகளுக்குரிய விலை (தபால் சார்ஜ் உட்பட) ரூ. 4**

(மாதிரிக்கு கடிதம் எழுதவும்)

விவரங்கட்கு:

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

**("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)**

**94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.**

3,34,569 மயிர்கள் இருப்பதாக 74 நாள் எண்ணிய பிறகு தெரிவித்தார். ஒரு மனிதனின் தலையில் எத்தனை மயிர்கள் இருக்க முடியும் என்று ஒரு பத்திரிகையில் திட்டவட்டமாக ஒரு எண்ணிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய தொழிலாளிக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே அவர் தனது நண்பர் ஒருவரின் தலை மயிர்களை எண்ணினார்.

தலைமயிர்களை எண்ணிச் சரியான கணக்குச் சொல்லிய ராஜ்கோ டோஸிக்கிற்குச் சும்மா இருக்க முடியவில்லை; எதையாவது எண்ணிக் கொண்டிருக்க அவருடைய மனம் துடித்தது. ஒவ்வொன்றிலும் 100 கிலோகிராம் வீதம், 2 கோணிப்பைகளில் அடங்கிய சோளம், கோதுமை, ஆகிய தானியங்களைத் தன்னால் எண்ண முடியும் என்று அவர் தனது நண்பர் ஒருவருக்குச் சவால் விடுத்தார்.

முதலில் அவர் சோளத்தை எண்ணினார். அந்த மூட்டையில் 4,21,350 தானியங்கள் இருப்பதாக 3 நாள் மூச்சு விடாமல் எண்ணிய பிறகு அவர் கூறினார்.

அடுத்தபடியாக அவர் கோதுமை மூட்டையில் உள்ள கோதுமை தானியங்களை எண்ண ஆரம்பித்தார். அது அவ்வளவு சுலபமல்ல. 14 நாள் எண்ணிய பிறகு 10,20,345 தானியங்கள் இருப்பதாக அவர் கூறினார்.

## ஒருவரே போதும்!

ஒரு வேலையைச் செய்ய ஒருவனே போதும் என்ற நிலையில் இருவர் சேர்ந்தால், அந்த வேலை கெட்டுவிடும்; மூவர் சேர்ந்தால், வேலை நடக்கவே நடக்காது.

—ஜார்ஜ் வாஷிங்டன்

## பயன் என்ன?

விஞ்ஞானத்தை மனித வர்க்கத்துக்கு நலன் செய்யப் பயன்படுத்த வேண்டும். இப்படிப் பயனாகும்படி பார்த்துக் கொள்வது பிரஜைகள் என்ற முறையில் நம்முடைய தெளிவான கடமை. மனிதன் வாழாது மாய்ந்தால், விஞ்ஞானத்தால் என்ன பயன்.

—வொர்ல்டு டைஜெஸ்ட்

## ஆரோக்கியம் வேண்டுமா? கதறி அழு!

ஸ்டட்கார்ட், பிப். 20— 'கவலையைத் தீர்ப்பது கண்ணீர்' என்றுதான் இது நாள் வரை உலக மக்கள் கருதி வருகிறார்கள். "வியாதிகளைத் தீர்க்கும் மருந்தாகவும் கண்ணீர் பயன்படுகிறது" என்று மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நோயாளிகள் வியாதியின் வேதனை தாங்காமல் அழுது கண்ணீர் வடிக்கிறார்கள். இதைப் பார்த்துப் பரிதாபப்படத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் சொரியும் கண்ணீர், அவர்களின் வியாதியை விரைவாகக் குணப்படுத்துகிறது.

தாங்க முடியாத சோகத்தால் மக்கள் அழுவதைப் பார்க்கிறோம். அழும்போது வடிக்கும் கண்ணீரில் உடலிலுள்ள பல நோய்க் கிருமிகளும், கெட்ட நீரும், கலந்து வெளிவந்து உடலைச் சுத்தமாக்குகிறது. ஆகவே, அழுவதினால் உள்ளத்தின் கவலை மட்டுமல்ல, உடலில் உள்ள நோயும் தீருகிறது.

உயிரினங்களில் அழும்போது, மனித இனம்தான் உண்மையாகக் கண்ணீர் வடிக்கிறது. நாய்கள் சில சமயங்களில் அழுவதுண்டாம். ஆனால் அவற்றின் கண்ணீர் வெளிவராது. போலித்தனமாக அழுவதை முதலைக் கண்ணீர் என்று கூறுகிறோம். ஆனால் முதலை ஒருபோதும் அழுவதோ கண்ணீர் வடிப்பதோ இல்லை. நயவஞ்சகர்கள் வடிக்கும் போலிக் கண்ணீர்தான் "முதலைக் கண்ணீர்"

கண்ணீர் என்றால் என்ன? கண்ணீர்ச் சுரப்பிகளிலிருந்து வெளிவரும் உப்புக் கலந்த நீர் என்று அகராதி கூறுகிறது. இந்தக் கண்ணீரில், சர்க்கரை, புரதம் முதலிய சத்துக்களும், வியாதிக் கிருமிகளை ஒழிக்கும் கிருமி நாசினிகளும் அடங்கியிருப்பதாக கண்ணீர் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதில் உள்ள கிருமி நாசினிகள் உடலில் நோய் பிடிக்காமல் தடுக்கின்றன. கண்ணீரில் ரசாயனத் தன்மை ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. சிலரின் கண்ணீரில் வெங்காய சத்தும் கலந்திருக்கும். கண்ணீர் புகை குண்டு போட்டதும் அதைச் சமாளிக்க கண்ணில் வெங்காயத்தை வைப்பது இதனால் தான். சிலருடையது புகைக் கண்ணீர். ஆண்களின் கண்ணீருக்கும் பெண்களின் கண்ணீருக்கும் நிறைய வேறுபாடு உண்டு. மஞ்சள் காமாலைக்காரர்கள் மஞ்சள் நிறத்தில் கண்ணீர் விடுகிறார்கள்.

கண்ணீர் வடியும்போது எந்த அளவுக்கு வியாதிக் கிருமிகள் வெளியேறுகின்றன என்பது திட்டவட்டமாகத் தெரிவதில்லை. எனினும் கண்ணீரில் கலந்து நோய்க் கிருமிகள் வெளியேறுவது மட்டும் உண்மை. கண்ணீரை ரசாயன முறையில் அலசி ஆராய்வதின் மூலம், நோயாளியின் வியாதி என்ன என்பதைக்

## மனித இயல்பு!

பேசாதிருப்பவனையும் தூற்றுகிறார்கள்; அதிகமாகப் பேசுகிறவனையும் தூற்றுகிறார்கள்; மிதமாகப் பேசுகிறவனையும் தூற்றுகிறார்கள். மக்கள் தூற்றாத எவனுமே உலகில் இல்லை.

—புத்தர்

## எளிதிலும் எளிது!

பெண்கள் பேசும் அவதூறுகளிலிருந்து தன் நற்பெயரைக் காத்துக்கொள்வதைவிட ஆண்களை எதிர்த்துத் தன் கற்பைக் காத்துக்கொள்வது ஒரு பெண்ணுக்கு எளிதாகும்.

—'க்வோரட்

கண்டுபிடித்து விடலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். கண்ணீர் ஆராய்ச்சி இப்போது தொடக்கக் கட்டத்திலேயே இருந்து வருகிறது. இது பற்றி நடந்துவரும் தீவிர ஆராய்ச்சிகளினால், இன்னும் பல உண்மைகள் வெளிப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## குழாய்களின் கோளாறுகளைக் கண்டுபிடிக்கும் நாய்

பெர்லின் மார்ச், 29—கிழக்கு ஜெர்மனியின் வடக்கு பகுதியில் ஷிவரின் என்ற நகரில் வாயு குழாய்களில் உள்ள கோளாறு களை அல்சேஷன் நாய் ஒன்று கண்டுபிடிக்கிறது. அந்த அதிசய நாய்க்கு டிப்ளமா ஒன்றும் வழங் கப்பட்டது. இத்தகவலை கிழக்கு ஜெர்மனி செய்தி ஸ்தாபனம் அறி வித்தது.

நாய்கள் பள்ளி யொன்றில் "மோஷ்" என்ற பெயருடைய பிரஸ்தாப நாய் பயிற்சி பெற்றது. வாயுக் குழாய்களில் வெடிப்பு, கசிவு போன்ற கோளாறுகளை இந்நாய் தற்போது கண்டு பிடிக் கிறது. ஷிவரின் நகரில், 176 கிலோ மீட்டர் நீளமுள்ள வாயுக் குழாய்களை மோப்பம் பார்க்க, இந்த நாய்க்கு சுமார் 2 மாத கால மாகிறது. இந்த வேலையை முன்பு மனிதர்கள் 6 மாத காலத்தில் செய்து வந்தனர்.

இந்த அதிசய நாய் இதுவரை 120 கோளாறுகளைக் கண்டு பிடித் துள்ளது. சில குழாய்கள் ஒன் றரை மீட்டர் ஆழத்தில் புதைக் கப்பட்டிருக்கின்றன.

கிழக்கு ஜெர்மனியில் இந்த முக்கியமான வேலையில் தற்போது 15 நாய்கள் ஈடுபடுத்தப்பட்டிருக் கின்றன.

## உலகிலேயே மிகப் பெரிய முட்டை !

டஸ்ஸல்டார்ஃப் (டாட்)—உல கிலேயே மிகப்பெரிய முட்டை மேற்கு ஜெர்மனியில் உள்ள டஸ் ஸல்டார்ஃப் பொருட்காட்சிசாலை யில் உள்ளது. பலகோடி ஆண்டு களுக்கு முன் அதாவது சரித்திர காலத்திற்கு முன்னதாக மடகாஸ் கர் தீவில் மட்டும் காணப்பட்ட பிரம்மாண்ட பறவைகள் முட்டை இது. இந்த அரிய முட்டையைப் பொருட்காட்சியில் தனியாக மிக வும் பாதுகாப்பாக வைத்திருக் கின்றார்கள். தன் மாதிரியை மட் டும் பிளாஸ்டிக்கில் செய்து காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். கேட்பவர்களுக்கு மட்டும் அசல் முட்டையைக் காட்டுகிறார்கள். இந்த முட்டையின் உயரம் 10 அங்குலம். 183 கோழி முட்டை கள் வைக்கக்கூடிய இடத்தை இந்த ஒரு முட்டை அடைத்துக் கொள்கிறது.

# இலக்கியத்தில் இயற்கை

கே. எஸ். மகாதேவன், பி.எஸ்ஸி., எம்.ஏ.,

விண்ணோடு உறவாடும் வகையில் எழுந்து நிற்கும் மலைகள் நெடுங்காலமாகவே புலவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன. மலைகளை உவமையாகக் கொண்டு பல உயர்ந்த செய்திகளை அவர்கள் விளக்கிச் சென்றுள்ளனர்.

## மனிதனும் மலையும்

நீண்ட காலம் மாற்றம் எதுவும் இல்லாமல்நிற்கும்இயற்கைக் கூறுகளில் மலையும் ஒன்று. காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகிலே தன் நிலையில் மாறுபடாமல் ஒரு மனிதன் இருப்பானானால் அவனை மலை என்று அழைப்பதில் தவறு என்ன இருக்க முடியும்? வள்ளுவர் மேலும் ஒருபடி சென்று,

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்று கூறி மனிதனை மலையினும் பெரியவனாக உயர்த்திவிடுகிறார்.

அவ்வாறே மனிதனது திறமையையின் உயர்ந்த எல்லையாக "மலையெடுத்தல்" கதைகளில் பேசப்படுவதையும் காண்கின்றோம். பழங்காலத்தில் வடபுலத்தின்மீது வெற்றி கொள்ளச் சென்ற மன்னர்களையெல்லாம் இமயமலை தடுத்து நிறுத்திவிட்டது. அந்த நிலையில் தங்கள் இலச்சினைகளை இமயத்தின் நெற்றியில் பொறித்துவிட்டு, அவர்கள் திரும்பவேண்டியிருந்தது. இவ்வுண்மையை,

"இப்பால் இமயத்து இருத்திய
வாள்வேங்கை"

"கயல் எழுதிய இமய நெற்றியில்
அயலெழுதிய புலியும் வில்லும்"

"தென்தமிழ் நாடாளும் வேந்தர்
செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்தவழும் இமய நெற்றியில்
விளங்கு வில் புலி கயல் பொறித்த
நாள்"

—என்பன போன்ற அடிகளால் காணலாம். தமிழர்களின் வீரம் வெளியுலகத்தில் பரவுவதற்குத் தடையாக இருந்த இமயத்தின் மீது புலவர்களுக்கு மிகவும் சினம். கம்பர் இராவணனைக் கொண்டு இமயத்தையே அசைக்கச் செய்கிறார். இராவணனை "மலையெடுத்த மன்னன்" என்று பல இடங்களிலும் பாராட்டிப் பேசுகிறார்.

"வெள்ளியங்கிரியினை விண்
தொடும்படி
அள்ளியெடுத்து ஆர்த்த
ஆற்றலோய்."

"வெள்ளெருக்கஞ் சடைமுடி
யான் வெற்பெடுத்த திருமேனி"

"மேனுயர் கயிலையை வென்ற
மேலை நாள்"

—என்ற வரிகள் மலையெடுக்கும் வீரத்தைப் பாராட்டும் வரிகளே.

## இமயம் நோக்கும் பாரதியார்!

"மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று இமயமலையின் பெருமையைப் பேசும் பாரதியாரும் தமிழன் வீரத்திற்குத் தடையாக அம் மலை இருக்க முடியாது என்பதில் கம்பருடன் இணைந்து நின்று பேசுகிறார்.

அவர்,

"விண்ணையிடிக்கும் தலைஇமயம்
எனும்
வெற்பை இடிக்கும் திறல் மறவர்"

என்று தமிழ் மறவரின் வீரத்தை பேசும்போது உண்மையிலேயே "மலையெடுக்கும்" மன்னனாக மாறிவிடுகிறார்.

## மலைகள்—
## கவர்ச்சிப் பொருள்கள்

எடுப்பாக உயர்ந்து நிற்கும் மலைகளும், மலைகளிலிருந்து இறங்கிவரும் வெள்ளிக் கம்பி போன்ற அருவிகளும் புலவர்களின் உள்ளத்தில் கவர்ச்சி மிகுந்த கற்பனைகளை எழுப்பியுள்ளன. இணைந்து நிற்கும் மலைகளிடையேஇறங்கிவரும் கான்யாறுகள் நிலமகளின் மார்பில் கிடந்து துவளும் மணியாரம்போல் தோன்றும்.

"மணிமலைப் பணைத்தோள்
மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரும்
ஆரம்போலச்
செல்புனல் உழந்த சேய்வரல்
கான்யாறு"

என்ற வரிகளால் அறியலாம்.

## மலைகள்—யானைகள்

பரந்து கிடக்கும் புல்வெளிகளில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் சிறு குன்றுகள் யானைகள் போலத் தோன்றுவதையும் புலவர்கள் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். வாழைப்பூ நீண்ட காம்போடு கூடியதாக இருப்பதை நாம் காண்கிறோம்.

இதழ்கள் உதிர்ந்தன போக எஞ்சியிருக்கும் வாழை மொக்கு கூடிய தலையோடு கூடிய வேல் போலத் தோன்றும். இத்தகைய வாழை மொக்கு ஒன்று அருகில் உள்ள ஒரு சிறு குன்றைத் தொட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட புலவர் வாழைப் பூ மலையைத் தொடுவது வேல் யானையைக் குத்துவது போல இருக்கிறது என்று கூறுகிறார். இதனை

"காழ்மண்டு எஃகம் களிறு முகம்
பாய்ந்தென"

"ஊழ் மலர் ஒழிமுகை உயர்
முகம் தோய" (மலைபடுகடாம்)

என்ற அடிகளால் அறியலாம்.

மலைகளை யானைகள் என்று சொல்வது போன்றே யானைகளை மலைகள் என்று மாற்றிச் சொல்லும் மரபும் உண்டு. குழந்தைகள் சொல்லி மகிழும் விடுகவிகளில்

"பிறை கழுவி மலை நடக்கும்" என்பது ஒன்று. பிறைபோல் வளைந்து உள்ள கோடுகளைத் தாங்கியபடி நடந்து செல்லும் யானையையே குழந்தைகள் இப்படிக் குறிப்பிடுகிறார்கள். மதங்கொண்ட யானையை அடக்கி அதன்மீது ஏறி அமர்ந்த கோவலனைப் பற்றிக் கூறும்போது மலையின்மீது வித்தியாதரன் இருந்தது போல இருந்தான் என்பதை,

"மையிருங்குன்றின் விஞ்சைய
னேப்பப்
பிடர்த் தலையிருந்து"

என்று கூறுகிறார்.

## மலையின் வேர்!

விண் தொடும்படி உயர்ந்து நிற்கும் மலைத் தொடர்களைக் காணும்போதெல்லாம் அவற்றை நிலப்பரப்பின்மேல்குவித்து வைக்கப்பட்ட மேடுகள்போல் நாம் எண்ணிவிடுகிறோம். இதனாலேயே மலைகளின் அடிப்பகுதி தட்டையாக இருக்கும் என்ற நம்பிக்கை கலைஞர்களிடம் இடம் பெற்றுவிட்டது. இராவணன் மலை எடுக்கும் காட்சியையோ, அல்லது அநுமன் மருந்து மலையை எடுத்துச் செல்லும் காட்சியையோ ஓவியமாகத் தீட்டுவோரும் படக்காட்சியில் காட்டுவோரும் மலையின் அடிப் பாகத்தைத் தட்டையாகக் கவிழ்த்துவைத்த சர்க்கரைப் பொட்டலம் போலக் காட்டிவிடுகின்றனர். இது தவறு. இன்றைய மலைகளெல்லாம் உருகிய நிலையில் தீப்பிழம்பாக இருந்த நம் பூமியுருண்டை குளிர்ந்து அளவில் சுருங்கும்போது அதன் மேற்பரப்பில் ஏற்பட்ட மடிப்புக்களேயாகும். இதனால், மலைகள் அளவிலும் எடையிலும் மிகும் பொழுது அவை இளகிய நிலையில் கீழே இருந்த நிலப்பகுதியைக் கிழித்துக்கொண்டு ஆழமாக இறங்கி இருத்தல் வேண்டும். இவ்வுண்மையை மனத்துள் கொண்டு பார்த்தால் மண்ணிற்கு மேல் தோன்றும் மலைகளெல்லாம் பனிக் கடலில் நீருக்கு மேல் எழுந்து தோன்றும் பனிக் குன்றுகளை ஒத்துள்ளன என்பது தெளிவு. பனிக்கட்டிகள், நீரில் மிதக்கும் போது தம் பெரும் பகுதியை நீர் மட்டத்திற்கு அடியில் வைத்துக் கொண்டு மிதப்பதை அறிவோம். அவை போன்றே நாம் காணும் ஒவ்வொரு மலையின் பெரும்பகுதியும் மண்ணிற்குள்ளே ஆழ்ந்து கிடக்கின்றன. எனவே, வெளியில் தெரியும் பகுதியைவிடப் பன்மடங்கு அதிகமான பகுதி மண்ணிற்குக் கீழே வேர்போலப் புதைந்து கிடக்கின்றது. எனவே, இராவணன் இமயத்தை எடுக்கும் போதோ, அநுமன் மருந்து மலையைத் தூக்கும்போதோ மலையின் வேரும் உடன் வந்தேயிருக்கும்.

## அனுமன் எடுத்த மலை

'ஹநுமானை' அனுமன் என்று குறைத்து அழகுபடுத்திய கம்பர் இன்றைய ஓவியர்கள்போல் அனுமன் எடுத்த மலையின் வேரை வெட்ட விரும்பவில்லை. அனுமன் மலையை எடுக்கும்போது அதன் வேரும் உடன் வந்தது என்று தெளிவாகக் கூறுகிறார். ஆற்றல்

மிக்க' அனுமனைக் கருவியாகக் கொண்டு மலையைக்கல்லி வேரைக் காட்டும் கம்பரின் அடிகள்,

" இங்கு நின்று இன்னன மருந்து
என்று எண்ணினால்
சிங்குமால் காலம் என்று
உணர்ந்த சிந்தையான்
அங்கது வேரொடும் அங்கை
தாங்கினன்
பொங்கிய விசும்பிடைக்கடிது
போகுவான்"

என்று அழகாகத் தெளிந்து கிடக்கின்றன.

ஆம்; அனுமன் மருந்து மலையிலுள்ள மருந்து வகைகளைத் தேட முயன்றான். முடியவில்லை. காலம் தாழ்ந்துவிடும் என்று அஞ்சிய மனிதன் மலையையே பெயர்த்தான். வேரோடு எடுத்துத் தன் அங்கையிலேயே தாங்கினன். பரந்த விண்ணிலே எழுந்து விரைந்து போய்விட்டான்.

## குன்றேறி நின்றால்...!

யானைகள் எல்லாம் மலைகள் என்று புலவர்களால் கூறப்படுவதைக் கண்டோம். இனி இந்த நடக்கும் மலைகளுக்கிடையே நடக்கும் போரை வெறும் நிலத்தில் நின்று காண்பது என்பது எளிதான ஒரு செயலாக இருக்குமா? எவ்வித அச்சமும் இல்லாமல் வசதியாகக் காண வேண்டுமானால் ஒரு குன்றின்மீது ஏறி நின்று கொள்வது நல்லது என்று சொல்லவும் வேண்டுமோ? தன் கை இடத்துப் பொருளிருக்கும் ஒருவன் அதனைக்கொண்டு ஒரு செயலைச் செய்வது எவ்வளவு வசதியாக எளிதாக இருக்கும்? அது குன்றின்மேல் நின்று யானைப் போர் பார்ப்பதுபோல் இருக்கும் என்பதை வள்ளுவர்,

" குன்றேறி யானைப்போர் கண்
டற்றால் தன் கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை"

—எனக் கூறுகிறார்.

வெறுங் குன்று ஏறினாலே இவ்வளவு சிறப்பு ஒருவருக்கு வந்து விடுகிறதென்றால், 'குணக்குன்று' ஏறி நிற்போருக்கு எவ்வளவு சிறப்பும் ஆற்றலும் வர வேண்டும்? கீழே கிடக்கும் ஒரு பாறைக் கல்லைக் கண்டு நாம் அதனிடத்தில் எச்சரிக்கையுடன் இருந்து பழகுகிறோம். இனி மலையுச்சியில் இருக்கும் ஒரு கல் சிறிது நிலை பிறழ்ந்து உருண்டுவந்து நம்மைத் தாக்கினால்? தாக்குதல் ஒரு கணமே நிகழ்கின்றது. இருந்தாலும், அதன் விளைவு நம்மால் தடுக்க முடியாததாகிவிடுகிறது. எடையோடு கூடிய பொருள்கள் உயரத்தில் உயர உயர அதிக ஆற்றலைத் (Potential Energy) தேக்கிவைத்துக் கொள்கின்றன என்பது ஓர் அறிவியல் உண்மை. உயர்ந்து நின்ற ஒரு பொருள் நிலையில் தாழ நேரும்போது இயங்கும் ஆற்றலைப் (Kinetic Energy) பெற்று வேகமாகச் செல்லத் தொடங்கும். இந்த அடிப்படையில்தான் மலையிலிருந்து கற்களும், ஆறுகளும் கீழே விசையுடன் உருண்டு வருகின்றன.

(59-ம் பக்கம் பார்க்க)

# 3 சர்க்கார் கல்லூரிகளில் மாலை நேர பி.யு.சி. வகுப்புகள்

## கல்வி இலாகா குறிப்பு விவரம்

### செங்கற்பட்டில் பெண்கள் கல்லூரி ஏற்படுத்த திட்டம்

வருகிற கல்வியாண்டிலிருந்து அரசாங்க கலைக்கல்லூரி, சென்னை அரசாங்க கலைக் கல்லூரி, கோயம்பத்தூர், மேரி ராணி கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளில் மாலைநேர பி.யு.சி. வகுப்புகளைத் துவக்க சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

அசெம்பிளியில் கல்வி இலாகா மானிய கோரிக்கை விவாதத்தின்போது சமர்ப்பிக்கப் பட்டுள்ள குறிப்பில் இவ் விவரம் அடங்கியுள்ளது.

செங்கற்பட்டிலும் மதுரை யிலும் பெண்கள் கல்லூரி திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்வி இலாகா சமர்ப்பித்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:

1965-66 வரவு-செலவு திட்டத்தின் பொதுக் கல்விக்காக ரூ. 35, 34 லட்சம் செலவு செய்ய வகை செய்கிறது.

#### தொடக்கக் கல்வி

மூன்றாவது திட்ட முடிவிற்குள் 6—11 வயதுள்ள மாணவர்களில் 92 சதவீதத்திற்குக் குறையாமல் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1965–66–ல் 6—11 வயதுத் தொகுதியிலுள்ள 5 லட்சம் சிறுவர், சிறுமியர் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

அடுத்த ஆண்டு 6–11 வயதுத் தொகுதியிலுள்ளவர்கள் எல்லோருடைய விஷயமாகவும் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலுக்கு வரும்.

6-11 வயதுள்ளவர்களை அதிக் மாகச் சேர்த்ததால் 11—14 வயதுத் தொகுதியினரை ஆரம்பக் கல்விக்குப் பிற்பட்ட கல்வியில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. 1965–66–ல் 2 லட்சம் மாணவர்களைச் சேர்ப்பதெனத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த இலக்கை எய்தினால், இம்மாநிலம் முழுவதிலும் சுமார் 5.9 லட்சம் மாணவர்கள் (11—14 வயதுத் தொகுதியிலுள்ளவர்கள்) கூடுதலாகச்

சேர்த்துக்கொள்ளப்படுவர். அதாவது திட்ட இலக்கைக் காட்டிலும் இரு மடங்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

## ஆங்கில போதனை

ஆரம்ப நிலையிலேயே ஆங்கிலப் பயிற்சியைத் துவக்கவும், ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்தவும் வகுத்துள்ள கொள்கைக்கிணங்க, 1963–64 முதல் 3–ம் வகுப்பிலிருந்து ஆங்கிலப் பயிற்சி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. 3 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளுக்கான திருத்த பாடத்திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக, மாநிலக் கல்வி நிலையம் ஒன்றை நிறுவ அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அந்த நிலையம் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன், அவர்களது தொழில் திறமையை உயர்த்தவும் உதவும்.

## பள்ளி உணவுப் பணி

இம்மாநிலத்தின் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஐநூற்றுப் பதினொன்று இடைநிலைப் பள்ளிகளில், ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. இதற்கான செலவு பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடைகளிலிருந்து செய்யப்படும்.

மூன்றாவது திட்டக் காலத்தில் 14–17 வயதுத் தொகுதியில் மேற்கொண்டும் 75,000 மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்பது இலக்கு. இந்த இலக்கை என்றோ நாம் தாண்டிவிட்டோம். நடப்புத்திட்ட முடிவில் அதிகப்படியாகச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 2.8 லட்சமாகிவிடும். 1965-66–ல் (இது மூன்றாவது திட்டத்தின் இறுதி ஆண்டாகும்) மேற்கொண்டும் 1,500 வகுப்புகள் துவங்கப்பட்டு, 14–17 வயதுத் தொகுதியில் 60,000 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

## விஞ்ஞான போதனை

1965–66 வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் 15 பள்ளிகளில் விஞ்ஞானம் போதிக்கும் முறைகளைச் சீரமைத்தல், 60 பள்ளிகளில் முக்கிய பாடங்களைப் போதித்தல், 100 பள்ளிகளில் நூல் நிலையங்களைச் சீரமைத்தல் முதலியவற்றிற்காகத் தொகை ஒதுக்கம் செய்துள்ளது. மாநிலத் திட்டத்திற்குப் புறம்பான ஒரு புதிய திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கப் பொறுப்புள்ள ஒரு சிறப்புத் திட்டமாகும். இது விரைவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்கான ஒரு

திட்டம் இது. இதன்கீழ், முதலில் பள்ளி ஒன்றுக்கு ரூ. 10,000 செலவில் 70 பள்ளிகளுக்காக விஞ்ஞானம் பொதிப்பதற்குரிய கருவிகள் வாங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 6.93 லட்சம் செலவிடப்படும். இதற்கு இந்திய அரசாங்கம் 100 சதவீதம் நிதி உதவி அளிக்கும். இத்திட்டம் ரூ. 38 லட்சம் உத்தேச செலவில் 1965–66–ல் 380 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

## பள்ளிகளுக்கு மானிய உதவி

1964–65 முதல் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் இலவசக் கல்வி கொண்டுவரப்பட்டது. எனவே, சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் ஆசிரியர்களுக்கு மாதம் சம்பளம் கொடுக்கத் தகுந்த நிதி வசதியின்றி வருந்துவதைத் தவிர்க்க அவர்களுக்குப் புதிய வகையில் உதவும் திட்டம் ஒன்றை 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1–ம் தேதி முதல் அரசாங்கம் வகுத்துள்ளது. அதன்படி, அரசாங்க உதவிபெறும் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்க் குழுவின் சம்பளம் படிகள் முதலியவற்றிற்கான தொகை மாதா மாதம் நிர்வாகத்தினருக்கு வழங்கப்படுகிறது. மேலும் பராமரிப்பு மானியம் ஒன்றும் ஷே நிர்வாகத்தினருக்கு வழங்கப்படுகிறது. இது ஆண்டு ஒன்றுக்கு நிர்வாக உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ. 1,500–உடன், பள்ளியின் பராமரிப்புக்காக அங்கீகரிக்கப்பட்ட முழுச் செலவையும் கொண்ட தொகையுமாகும். ஷே நிர்வாகத்தில் உள்ள ஆசிரியர்களின் சம்பளம், அரசாங்க வீதங்களையனுசரித்து நிச்சயித்ததினால் சில பிரச்னைகள் எழுந்தன. அரசாங்கம் அளித்த தாராளமான சலுகைகள் காரணமாக இதை அனைவருக்கும் திருப்தியளிக்கும் வகையில் தீர்த்து வைக்கப்பட்டன. 1964–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1–ந் தேதி முதல் அளிக்கப்பட வேண்டிய ஆசிரியர் சம்பள மானியத்தின் காரியங்களுக்காக, கல்வித்துறை முதலில் நிச்சயித்த அங்கீகரிக்கப்பட்ட வீதங்கள் அரசாங்கச் சம்பளம் வீதங்களையொட்டியும், முந்திய உதவித் திட்டத்தின்படி 1964 மார்ச் மாதத்திற்கான மானியத்தை மதிப்பிடவேண்டிய வீதங்களை அனுசரித்தும் அமைந்திருந்தன. இது 1964 மார்ச் மாதத்தில் ஆசிரியர்கள் பெறவேண்டிய சம்பள வீதத்தை விடக் குறைவாக இருந்தது. நிர்வாகத்தினர்களும், கல்வித்துறை நிச்சயித்த வீதத்திற்குமேல் சம்பளம் கொடுக்க மாட்டார்கள். எனவே 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அவர்களுடைய ஊதியத்தில் உடனடியான குறைவு ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. ஆகவே, அரசாங்கம் கீழ்க்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பித்தது :—

(i) அரசாங்க கல்வித்துறை சம்பள வீதப்படி நிச்சயித்து அங்கீகரிக்கப்பட்ட சம்பள வீதங்

கள்தான் சம்பளம் வழங்குவதில் பின்பற்றப்படும்.

(ii) 1964 மார்ச் மாதத்திற்கான மொத்த ஊதியத்தில் ஏற்படும் உடனடியான குறைவுகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கும்.

(iii) உண்மையான சம்பள வீதத்தின் அடிப்படையில், 1964 மார்ச் மாதத்திற்காக அளிக்கப்படுகிற மொத்த ஊதியத்திற்கும், அங்கிகரிக்கப்பட்ட சம்பள வீதத்தை அனுசரித்து 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து நிலுவையாயுள்ள மொத்த ஊதியத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகை, தனிப்பட்ட சம்பளமாகக் கருதப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சம்பள வீதங்களில் எதிர்காலச் சம்பள உயர்வுகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## கல்வி சீரமைப்பு

பத்து ஆண்டுப் பள்ளிப் படிப்பை 11 ஆண்டுப் படிப்பாக மாற்றிய காரணத்தால், பல்வேறு மொழிகளிலும், பாடங்களிலும் பாடமுறைத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தன. இதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு ஒன்று அப்பணியைப் பொருத்தமாகச் செய்துமுடித்தது.

பாடமுறைத் திட்டத்தின் நகல் ஒன்று, கல்வி நிபுணர்களின் அபிப்பிராயக் குறிப்புகளுக்காக தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியிடப்பட்டது. 1,500 பேர் கருத்துக் குறிப்புகளும் ஆலோசனைகளும் அனுப்பியிருந்தனர். அவற்றை நியாயமான முறையில் ஆலோசித்துப் பாடமுறைத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மாற்றியமைக்கப்பட்ட பாடமுறைத் திட்டங்கள் பல்வேறு ஸ்டாண்டர்டுகளில் கீழ்க்கண்டவாறு கொண்டுவரப்படும்.

| வகுப்புகள் | | பாட முறைத் திட்டம் கொண்டு வரப்படும் ஆண்டு. |
|---|---|---|
| 1 முதல் 5 வரை | | 1965-66 |
| 6 | 9 | 1966-67 |
| 7 | 10 | 1967-68 |
| 8 | 11 | 1968-69 |

இந்த இடைக் காலங்களில் கல்வித்துறை மாற்றியமைக்கப்பட்ட பாட முறைத் திட்டத்தை அனுசரித்து பல்வேறு ஸ்டாண்டர்டுகளில் பல்வேறு பாடப் புத்தகங்களைத் தயாரித்து பாடப் புத்தகக் குழுவின் இசைவைப்பெற வசதியாயிருக்கும். 0-வது வகுப்பிலும், 11-வது வகுப்பிலும் இரண்டு தேர்வுப் பாடங்களைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பல்வேறு விளைவுகளை அரசாங்கத்தின் கவனத்துக்கு உயர்நிலைக் கல்வி வாரியம் கொண்டுவந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் பல அம்சங்களும் ஆராயப்பட்டு நடைமுறை சாத்தியமான தீர்வு காணப்படும்.

போர்டு பள்ளிகளை அரசாங்கம் உயர்நிலைப் பள்ளிகளாகக் கருதுவது, ஊழியர்களை அந்தந்த

வகைகளில் அரசாங்க ஊழியர்களாக ஏற்பது (ஆனால், இவ் விஷயத்தில் இரு சார்பிலுமுள்ள பணியாளரது நலன் பாதிக்காமல் பாதுகாக்கப்படும்) ஆகிய விஷயங்கள் ஆலோசனையில் உள்ளன.

## புது கல்லூரிகள்

1965-66-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொன்றாக ஐந்து அரசாங்க கலைக் கல்லூரிகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரண்டு அரசாங்க கலைக் கல்லூரிகளும் ஆக ஏழு அரசாங்கக் கலைக் கல்லூரிகளைத் திறக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேற் சொன்ன ஏழு கல்லூரிகளில் இரண்டு (செங்கற்பட்டு, மதுரை மாவட்டங்களில்) அமையும்.

## மாலை நேரக் கல்லூரிகள்

இம்மாநிலத்தில் மேல்நிலைக் கல்வி வளர்ச்சியடைவதில், 1965–66–ல் மாலைக் கல்லூரிகள் திறக்கப்படுவது குறிப்பான இடத்தைப்பெறுகிறது. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட மூன்று அரசாங்கக் கல்லூரிகளில் மாலை நேரக் கல்லூரி புகுமுகப் படிப்பை துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் கலைக் கல்லூரி, சென்னை. அரசாங்க கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்; மேரிராணிக் கல்லூரி, சென்னை. இதற்கென 1965–66–ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தேவையான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரைப் பல்கலைக் கழகக் குழு அதன் அறிக்கையை அனுப்பியுள்ளது. இதை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

நான்காம் திட்டத்தில் இரண்டாவது சைனிக் பள்ளி ஒன்றைக் கோடைக்கானலில் திறக்க ஆய்வு நிலையில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பொறியியற் கல்லூரிகள்

சேலம் மாவட்டத்தில் 1965–66–ல் அரசாங்க பொறியியற் கல்லூரி ஒன்று நிறுவப்படும். (இதைச் சேர்த்து 11 ஆகும்).

பாண்டிச்சேரியிலுள்ள மோதிலால் நேரு பாலிடெக்னிக் உட்பட இம்மாநிலத்தில் இப்போது 26 பாலிடெக்னிக்குகள் உள்ளன. மூன்றாவது திட்ட முடிவிற்குள் அவற்றில் டிப்ளோமா பெறும் 4,200 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

மூன்றாவது திட்டத்தில் பெண்களுக்குத் தொழில்நுட்பக் கல்வி அளிக்குந் திட்டம் துவக்கப்பட்டது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்று துவக்கப்பட்டது.

## டிப்ளோமா பாட முறைக்கான சிறப்புக் கல்வி நிலையங்கள்

இம்மாநிலத்தில் அடியிற்கண்ட சிறப்புக் கல்வி நிலையங்கள் டிப்

ளோமா பாட முறைகளிலும் சான்றிதழ் பாட முறைகளிலும் பயிற்சி அளிக்கின்றன :—

1. பிராந்திய அச்சுத் தொழில் பள்ளி, சென்னை. பிலிம் தொழில் நுட்பப்பள்ளி, சென்னை. 3. தோல் தொழில் நுட்பப்பள்ளி, சென்னை. 4. ரசாயனத் தொழில் நுட்பப்பள்ளி, சென்னை. 5. ஹோட்டல் தொழில் நுட்பப் பள்ளி, சென்னை.

## டிப்ளொமா கல்வி நிலையங்கள் 1965–66–ல் கூடுதல்

நெசவுத் தொழில் நுட்பக்கல்வியில் டிப்ளொமா பெற்றவர்கள் அரிதாயிருப்பதால், சென்னை, நெசவுத் தொழில் நுட்பப் பள்ளி என்னும் ஒரு தனிப் பள்ளியைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் 30 பேர் ஆரம்பத்தில் சேர்க்கப்படுவர். அடுத்துவரும் ஆண்டுகளில், தேவைகளுக்கேற்ப அந்த எண்ணிக்கை உயரும். அடையாற்றிலுள்ள மத்திய தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் வளவுகளுக்குள் இந்தப் பள்ளி நிறுவப்படும்.

பாலிடெக்னிக்குகளில் இரண்டாண்டு வணிகத் துறைப்படிப்பு டிப்ளொமா பாட முறையைக் கொண்டு வரலாம் என்று அ. இ. வணிக இயல். கல்விச் சபையார் கருதினர். அப்பாட முறை பெண்களுக்கான அரசாங்கப் பாலிடெக்னிக்குகள் மூன்றில் கொண்டு வரப்பட்டது. தொழிலும், வர்த்தகமும் அதிக அளவில் அபிவிருத்தியடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், சிறுவர்களுக்கான முழுநேர செக்ரடேரியல் பாடமுறை எதுவும் இராததாலும், அடையாற்றிலுள்ள மத்திய தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் "தொழில் பயிற்சிக் கல்வி நிலையம்" ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நான்காவது திட்டத்துக்கான முன்னோடி வேலைத் திட்டம்

மாநில அரசாங்கம் தற்போது இறுதியாகத் தயாரித்துள்ள நான்காவது திட்ட நகலில் இம்மாநிலத்தில் கூடுதலான பாலிடெக்னிக்குகளை நிறுவ வகை செய்யப்பட்டுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காகவும், கட்டிட வேலைக்காகவும், மாணவர்கள் இவற்றில் சேர்க்கப்பட்டதிலிருந்து சம்பந்தப்பட்ட படிப்பில் தேறி வெளிவருவதற்கும் ஆகும் கால அளவினைக் கருத்தில் கொண்டு தஞ்சாவூர், தென்காசி, மேட்டூர், கடலூர் ஆகிய இடங்களில் அரசாங்கப் பாலிடெக்னிக்குகளை நிறுவுவதற்காக 1965–66–லேயே நில ஆர்ஜிதம் செய்வது போன்ற வேலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## இளநிலைத் தொழில் நுட்பப் பள்ளிகள்

இம்மாநிலத்தில் இதுவரை 10 இளநிலைத் தொழில் நுட்பப் பள்ளிகள் துவக்கப்பட்டு விட்டன. காஞ்சிபுரம், நாகப்பட்டினம், குடியாத்தம், சேலம்,

(31–ம் பக்கம் பார்க்க)

# நம் நாட்டு மூலிகைகள்

வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பன்

செம்பையைத் தெரியுமா உங்களுக்கு? யாருக்குத் தெரியாவிட்டாலும் இந்தச்சங்கீதப் பிரியர்கள் இருக்கிறார்களே! இவர்களைக் கேட்டால், "தெரியுமே! இன்றைக்குத்தான் செம்பை புரோகிராம்! நாளைக்கு செம்மங்குடி! அதற்கு அடுத்த நாள் சீர்காழி" இப்படியாக அடுக்கிக்கொண்டே போவார்கள். ஆனால், இங்கு குறிப்பிட்டது 'சங்கீத செம்பை' அல்ல. மூலிகைச் செம்பையைப் பற்றித்தான்!

இந்தச் செம்பை அகத்தியினத்தைச் சேர்ந்த ஓர் சிறு மர வகுப்பு. சிறு செடியாகவுமிருக்காது. பெரு மரமாகவும் வளராது. நாடு, காடு எங்கணும் நிறைந்து தன்னிச்சையாக வளரக் கூடியது. இதன் இலைகள் ஏறத்தாழ புளிய இலைபோன்று இருக்கும். இம்மாதிரி உள்ள இலைகளை உடைய மூலிகைகளுக்கெல்லாம் ஓர் விசேஷ சக்தி இருக்கத்தான் செய்கிறது! இந்தச்செம்பை இனத்திலே மூன்று விதமுண்டு. ஒன்று மஞ்சள் நிறமுடைய பூவையும், இரண்டு சிகப்பு நிறமுடைய பூவையும், மூன்றாவதாக கருமை நிறமாகி நடுவில் மஞ்சளும் சிகப்பும் கலந்துகாணும். இந்தச் செம்பைக்கு கருஞ்செம்பை என்று பெயர்.

இந்தக் கருஞ் செம்பைக்குத்தான் விசேஷ குணமும் சக்தியும் உள்ளதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதன் பூக்கள் அகத்திபூவைப்போல் ஆனால் வடிவில் சிறியனவாக இருக்கும். தும்பைப் பூவைப் பார்த்திருக்கிறீர்களா? அதுபோல ஓரே இதழ் அலகமாக விட்டு அதன் கீழ் ஒரு மொட்டு இருக்கும். இதழின் ஓரங்களும் மொட்டும் கருமை நிறமாகி உட்புறம் மஞ்சளும் அதற்கடுத்தபடி சிகப்பும் கலந்து காணும். மலராத மொட்டுக்கள் சுத்த கருமை நிறமாகவே இருக்கும். இதன் காய்கள் காராமணி காய்கள்போல நீண்டு மெல்லியதாக ஒரு சாண் அளவுக்கு மேலாக வளரும். உலர்ந்த பின் அதனுள் விதைகள் சலசல வென்று ஒலிக்கும். பார்வைக்கு அலங்காரமான தோற்றமளிக்கக் கூடியது கருஞ் செம்பை.

குணமும் செய்கையும்: இலை, பூ, காயின் விதை வேர் யாவும் மருத்துவப் பயன் உள்ளது. இம் மூலிகை செய்கையில் பூனை வணங்கி என்னும் குப்பைமேனிக்குச் சமமாக ஒப்பிடலாம். பொதுவாக உடலுக்கு உஷ்ணத்தைக் கொடுத்து புழுக்களையும் நுண்ணுக் கிருமிகளையும் அழித்து உடலைத் தூய்மையாக்கும். மேக ரோக நிவாரணி சிறுநீரைப் பெருக்குவதில் நெருஞ்

சில் போன்றது. விக்கங்களைக் கரைத்து ரணங்களை ஆற்றுவதில் வேப்பிலை, உத்தாமணி ஆகியவை போன்றது. மாதவிடாய் கோளாறுகளான உதிரச் சிக்கல், மிகு உதிரப் போக்குகளைச் சரி செய்து,வாய்வுக் கட்டிகள்,காயம், ரணங்கள் முதலியவைகளையும், ஆற்றி விடும் ஆற்றல் படைத்தது. ஆனால் குப்பைமேனிக்குள்ள கடுமையான வாந்தி, குமட்டல் போன்ற செய்கை இதற்குக்கிடையாது.

'இலையின் பயன்': சீழ் கொண்ட கட்டிகள், பழுத்து உடைய வேண்டுமானால் கருஞ் செம்பை இலையை மட்டும் உருவி, தண்ணீர் விடாமல் அறைத்து சீழ் கட்டிகளின் மேல் வைத்து கட்டி வர அவை பழுத்துடையும். மீண்டும் சுத்தம் செய்து இரண்டொரு தரம் கட்டி வர உள்ளிருக்கும் சீழ் யாவும் வெளியாகி கட்டிகள் ஆறிப் போகும். அறையாப்பு எனப்படும் தொடைவாழைக் கட்டிகளுக்கும் இப்படியே செய்யலாம். உடலெங்கும் ஓடிக்கட்டும் ஓடு வாய்வுக் கட்டிகள் குணமாக வேண்டுமானால் இந்த இலையை ஆமணக்கு நெய் விட்டு வதக்கி இளஞ் சூட்டுடன் வைத்து கட்ட வராமல் போகும். ரத்தக் கட்டிகளும் உடையாமல் அமுங்கி விட வேண்டிய கட்டிகளுக்கும் இலையை வதக்கித்தான் கட்டவேண்டும்.

"வெட்டுக் காயங்கள் ஆறிவிட" அடிபட்ட காயம், கத்தி போன்ற ஆயுதங்கள் விபத்துக்களால் ஏற்படும் சதைக் கிழிச்சல் மற்றும் புதியதாக உண்டான ரணம் ஆகியவைகளுக்கு இதன் இலை ஆச்சர்யமான குணம் தர வல்லது. காயம், ரணம் எவ்வளவு பெரியதாகஇருப்பினும் சரி, கருஞ் செம்பை இலையை நீர் விடாமல் இடித்து அதன் சாற்றை ரணத்தின் மேல் விட்டு இலைகளை ஆமணக்கு நெய் விட்டு வதக்கி ரணத்தின் மேல் வைத்துக் கட்டி விட இரண்டு முதல் நான்கு நாட்களில் சீழ் பிடிக்காமலேயே ரணம் பூராவும் ஆறிவிடும். அடிபட்ட ரண காயங்களுக்கு கிராமங்களிலும் மருத்துவ மனை இல்லாத இடங்களிலும் கருஞ் செம்பை ஓர் இயற்கையின் வரப் பிரசாதம் என்றால் மிகையல்ல.

கபம், மேக ரோகம் கரப்பானுக்கு இலையைச் சுத்தமாக்கி இடித்து அரை முதல் 1 சங்களவு வயதுக்குத் தக்கபடி உள்ளுக்குக் கொடுக்க உடலில் சீழ் பிடிக்கும் தன்மை மாறி ரத்த சுத்தியும் கரப்பான் மேக ரோக கிருமிகள் கப நோய்கள் விலகுவதுடன் சிறு நீரைப் பெருக்கித் தள்ளவும் மலத்தையும் இளக்கி விடுகிறது.

"விப்புருதி புண்ணும்
வீறு கரப்பானும் போம்
தப்பாமல் மேகந் தணியும்
காண்வெப்பார்
கபரோக மேகுங் கருஞ்
செம்பையொன்றுக்
கிபமா முகன் தன்னை எண்"

(கும்பமுனி)

## வாதநீர் கட்டும் வீக்கங்களும் கரைய

அவயவங்களில் கை, கால் மூட்டுகள், தொடை இடுக்குகள் (அரையாப்பு) கண்டமாலை என்று கழுத்தைச் சுற்றிவரும், கழலைக் கட்டி, கை சந்திகள் (அக்குள்) விரையில் காணும் வீக்கம் ஆகிய இடங்களில் வாதநீர் தங்கி வீக்கமாகி கடின தன்மையாகி உடையாமலும் அழுந்தாமலும் அவதிப்படுபவர்கள் நாள்தோறும் இரவு நேரம் படுக்கும் சமயம் இந்த இலையைத் தவறாமல் ஆமணக்கு நெய்யில் வதக்கி இளஞ் சூட்டுடன் வைத்துக் கட்டி வாருங்கள். முருகன் அருளால் இவைகள் இருந்த இடம் தெரியாமல் ஓடும்.

"பெண்மணிகளுக்கு: இதன், இலைச்சாற்றை 1 அவுன்ஸ் அளவு காலையில் வெறும் வயிற்றில் உள்ளுக்கு கொடுக்க வாய்வு காரணத்தால் தடைப் பட்ட மாத விடாய் வெளியாகும். வயிற்றிலுள்ள பூச்சிகள் கிருமிகள் மலத்துடன் வெளியாகும்.

## சொறி சிரங்கு சர்ம புண்களுக்கு

"சொறி, சிரங்கு, சர்ம புண்களுக்கு" கருஞ் செம்பை இலை, குப்பை மேனி, இலைசமமாகத்தின மும் எடுத்து அதனுடன் சிறிது உப்பும் சேர்த்து அரைத்து, கை, கால், உடல், முழுதும் பரவித் தொல்லை கொடுக்கும் சீழ் பிடித்த சிரங்குகள் படையாக கிளம்பும், சொறி ஆகியவைகளுக்குத் தடவி, 3 மணி நேரம் கழித்து குளித்து வர விரைவில் குணமாகி விடும். இச் சிகிச்சை செய்யும் போது உள்ளுக்கு ஊசி போன்ற ஆங்கில மருத்துவம் பயன் தராது.

## "பூவின் உபயோகம்"

ஒரு நீண்ட இரும்புக் கரண்டியை அடுப்பிலே காய வைத்து தட்டி, அதில் சுத்தமான நல்லெண்ணை விட்டு பத்து கருஞ் செம்பை பூவையும் சிறிய துண்டு கஸ்தூரி மஞ்சளும் சாம்பிராணியும் போட்டுக் கொதிக்க காய வைத்தால், எண்ணை பொங்கி விழும். அது சமயம் வெளி எடுத்து கீழே ஒரு பாத்திரத்தை வைத்து, கரண்டியை ஆறவைத்து கை பொறுக்குமளவுக்கு சூடு தணிந்தவுடன் தலை உச்சியில் வைத்து, அறக்கி தேய்த்துதட்டி விட்டுப்பின் அரை மணி நேரம் கழித்துத் தலை முழுகவும். இப்படியே இரண்டு அல்லது ஒரு முறை வாரம் தவறாமல் செய்து வர, தீராத்தலை வலி, சன்னி(வாத இழுப்பு, கப இழுப்பு) சல தோடம், கபால குத்து, குடைச்சல் வலி,நாற்பட்ட பீநச ரோகம், தலை பாரம், மண்டையில் நீர் ஏற்றம், கழுத்து நரம்பு வலி, சூதக ஜன்னி, கண், காது, மூக்கு சம்பந்தப்பட்ட ஆரம்ப தொல்லைகள், யாவும் தீரும். பொதுவாக கழுத்துக்கு மேற்பட்டு வரும் நோய்களைத் தீர்க்க வல்லது. இம்முறை இன்றும் சில இடங்களில் பழக்கத்தில் இருந்து வருகிறது. இதனாலேயே பல வீடுகளில் இந்த

மூலிகையை வைத்து வளர்ப்பார்கள். இதன் பூ கிடைக்காத இடங்களில் மொத்தமாகச் சேகரித்து எடுத்து உலர்த்தி வைத்துக் கொண்டு வேண்டும் போது பயன் படுத்தலாம்.

மரப்பட்டை: பட்டைகளை மட்டும் உலர்த்தி இடித்து மெல்லிய தூளாக்கிக் கொண்டு தினமும் காய்ச்சிய பாலுடன் 15 அரிசி எடை சாப்பிட கெட்ட ரத்தம் சுத்தியாகும். மலச்சிக்கலைப் போக்கும். உடலுக்கு உஷ்ணத்தையும், பலத்தையும் தரும். நமைச்சல் சொறி சிரங்குகளுக்கு இதை உள்ளுக்கு உபயோகம் செய்து நற்பயன் பெறலாம்.

விதைகள்: கருஞ்செம்பையின் உலர்ந்த காயின் உள் விதைகள், சிறு பயறை விட சிறிது. இதை ஊற வைத்து அறைத்து சுண்டைக்காய் அளவு உள்ளுக்குக் கொடுத்துவர, அளவுக்கு மீறியும் 20 நாளுக்கொருதரம் மாத விடாய் கண்டு உதிரப் பெருக்கு ஆகும் மாதர்களுக்கு ஷெ தொந்தரவை நிறுத்தி சரியாக்கும், பெரும்பாடு என்று சொல்லப்படும் சதா உதிரம் போவதையும் தடுத்து நிறுத்தி விடும். வயிற்றுக் கோளாறு சம்பந்தமான அஜீர்ண பேதி, உஷ்ண பேதிகளையும் நிறுத்தும். கட்டிகளை உண்டாக்காமல் தடுக்கும்.

மூலிகை இனங்களில் கருமை நிறம் ஏதாவது ஓர் உறுப்பில் இருப்பவைகளுக்கு விஷ நீர்களையும், மேக ரோகங்களையும் கண்டிக்கும் குணம் உண்டு என்பதைத் தெரிந்து வைத்தல் அவசியமாகும். விஷக்கடிகளுக்கு கரப்பான் பூண்டைப்போலவே இந்தக்கருஞ்செம்பையும் உபயோகமாகிறது.

வேர்: இதன் வேரையும் விதையையும் சம அளவாக உலர்த்தி வைத்துக்கொண்டு தேள், வண்டு, குளவி, பூரான், தேனீ, சிறுபாம்பு, மா வட்டைக் கடிகளுக்கு 20 முதல் 30 அரிசிஎடை உள்ளுக்குக் கொடுத்து கனமான வேர் துண்டு எடுத்து வெந்நீரில் கல் மேல் உறைத்து, அதைக் கடி வாயில் தடவி நெருப்பனல் காட்ட விஷம் முறிந்து வலி சாந்தமாகி விடும்.

வேரில் வசியமை: வாசகர்களே! மருதோன்றி, எருக்கன், பூனை வணங்கி, தொட்டால் சிணுங்கி, ஆகியவை போன்றே இந்தக்கருஞ் செம்பையும் வசிய மூலிகை என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆமாம், இந்த மூலிகைக் குக்குறிப்பிட்ட கிழமையில் முறைப்படி கன்னிப்பெண் நூற்ற நூலில், காப்புக்கட்டி உரு செபித்து தூபதீப நைவேத்தியங்களைச் செய்து எடுத்து குழித் தைலம் எடுத்து வைத்துக் கொண்டால் ஜெகமெல்லாம் வசியமாகும்.

"ஆமப்பா கருஞ்செம்பை
மூலியைத்தான்
அடக்கமுடன் கன்னி நூலில்
காப்பு கட்டி
போமப்பா உரு செபித்து
வேரை வாங்கி,

பெருமையாய் குழித்தைலம்
இறக்குவாயே

(ஓலைச்சுவடி)

இப்படிச் செய்வது எல்லோர்க்கும் எளிதல்ல! என்றாலும் கருஞ்செம்பையை வீடுகளில் வளர்த்து விசுவாசமுடன் தினமும் அவைகளைப் பூசிப்பதால் குடும்பத்தில் சுபிட்சம்நிலவும் என்பதனைத் திடமாக நம்பலாம். அத்துடன் இந்த மூலிகையை இல்லத்தில் இருக்கும் போது, ஓடு வாய்வு, கட்டிகள், அடிபட்ட ரண புண், புரை, மேகம், கபம், தலைவலி, மாதவிடாய் பெரும்பாடு, விஷக்கடி, ஆகியவை வந்தபோது மருத்துவ சாலையை நாடிப் போகவேண்டியதில்லை. நினைத்துக் கொள்ளுங்கள், கருஞ்செம் பையை.

"தினமணி சுடர்"

---

(26–ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணாமலைநகர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் அடுத்த கல்வியாண்டிலிருந்து மேலும் 6 பள்ளிகள் செயல்படத் துவங்கும். எஞ்சிய பள்ளிகளைத் தூத்துக்குடி, காரைக்குடி, ராஜபாளையம், ஆவடி ஆகிய இடங்களில் 1965–66–ல் துவக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இப்பள்ளிகள் அனைத்திலும் ஒவ்வோராண்டும் 1,200 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

—"தினமணி"


## "ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# செய்திச் சுருள்

## நிமிடத்துக்கு 32 குழந்தைகள்

### இந்தியாவில் பிறக்கின்றன

மதுரை, மார்ச். 16—சென்ற ஆண்டில் 1 கோடியே 70 லட்சம் குழந்தைகள் இந்தியாவில் பிறந்தன. அதாவது நிமிடத்துக்கு 32 குழந்தைகள் வீதம் பிறந்தன என்று இங்குள்ள மருத்துவ வல்லுநர் ஒருவர் கூறுகிறார்.

இங்குள்ள அரிமா சங்கத்தில் அண்மையில் பேசிய டாக்டர் கே. பாஸ்கர ராவ் மேற்கண்டவாறு கூறினார். மதுரையில் மட்டும் 1954ஆம் ஆண்டில் 25 ஆயிரம் குழந்தைகள் பிறந்தன. அவற்றில் மூன்று குழந்தைகளுள்ள பெற்றோருக்குச் சுமார் 50 சதவிகிதக் குழந்தைகளும், நான்கு குழந்தைகளுள்ளவர்களுக்கு 25 சதவிகிதக் குழந்தைகளும், ஐந்து அல்லது ஆறு உள்ளவர்களுக்கு 25 சதவிகிதக் குழந்தைகளும் பிறந்தன.

## அன்னாசி நாரிலிருந்து நைசான துணி

### விரைவில் இந்தியாவில் பெருமளவில் உற்பத்தி

சென்னை. பிப். 7—உள் நாட்டு உபயோகத்துக்காகவும், மற்றும் ஏற்றுமதிக்காகவும் விரைவில் அன்னாசிப்பழ இலையின் நாரிலிருந்து தயாரிக்கப்படும் நைசான மற்றும் மோட்டாத் துணிகள் இந்தியாவில் பேரளவில் உற்பத்தியாக ஆரம்பித்துவிடும் என்று இங்கு தெரிய வந்துள்ளது.

அன்னாசியிலிருந்து நைசான, மற்றும் மோட்டாத் துணிகளைத் தயாரிப்பது பற்றி ஆராய மங்களூரில்இருந்து 20மைல் தூரத்தில் தென் கன்னடத்தில் மூத்பித்ரி என்னும் கிராமத்தில் 1956ல் அகில இந்திய கைவினைப் பொருள் போர்டு அமைத்த ஆராய்ச்சி நிலையம் தனது பரிசோதனை வேலையில் வெற்றி பெற்று அன்னாசி நாரைக் கொண்டு மாதிரித் துணிகள் சிலவற்றைத் தயாரித்துள்ளதாகவும், இவை ஏற்கனவே டெல்லியில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

சென்னையிலுள்ள பிராந்திய கைவினைப் பொருள் போர்டின் அதிகாரி ஒருவர் நேபன் நிருபரிடம் கூறியதாவது: கண்ணைக்கவரும் கலர்களில் நல்ல உறுதி கொண்டதும், பட்டுத் துணியைப் போன்று நைசானதுமான அழகிய அன்னாசிநார் துணியை இந்தியாவில் தயாரிக்க முடியும் என்று போர்டு இடைவிடாத ஆராய்ச்சிக்குப்பிறகு ஊர்ஜிதமாக்கியுள்ளது. இது காலப்போக்கில் பிலிப்பைன்சில் இதே போலத் தயாரிக்கப்படும் துணிகளுடன் உலக மார்க்கெட்டுகளில் போட்டியிட முடியும்.

உரைத் துணிகள், படுக்கை விரிப்புகள், மேஜைத் துணிகள், ஷர்டிங்குகள், ரவிக்கைத் துணிகள், தரை விரிப்புகள் போன்ற பல வகையான துணிகளைத் தயாரிக்க மூத்பித்ரி ஆராய்ச்சி நிலையத்தில் சிக்கலான நெசவு முறைகள் பயன் படுத்திப்பார்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

அன்னாசி நார்த் துணிகள் ஆங்கிலத்தில்''பைனா—கிளாத்'' என்று குறிப்பிடப்படுகிறது.

டெல்லியில் பரீட்சார்த்தமாக இத்துணிகள் விற்கப்பட்டு இவற்றை வாங்குவோரின் கருத்துக்களை அறிந்ததிலிருந்து மக்களை இத் துணிகள் கவர்ந்துவிட்டன என்று தெரியவருகிறது. கூடிய விரைவில் அன்னாசி நார்த் துணித் தயாரிப்புத் தொழில் பொருளாதார ரீதியில் லாபமளிக்கக் கூடியதாக நிலை பெற்றுவிடலாம் என்றும் கருதப்படுகிறது.

சாயங்களும், கலர்களும் பருத்தித்துணி அல்லது பருத்தி நூலை விட அன்னாசி நார் துணிகளில் அதிகமான அளவில் இயற்கையாக எடுப்புடன் விளங்குகின்றது என்று போர்டு நடத்திய ஆராய்ச்சியில் இருந்தும், பரிசோதனைகளிலிருந்தும் தெரியவந்துள்ளது.

## ஆங்கிலம் நீடிக்கவேண்டும்:

### பிரின்ஸ்பால்கள் கருத்து

சென்னை. மார்ச். 23 ஆங்கிலம் மத்திய சர்க்காரின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்; சர்வகலாசாலைகளில் போதனமொழியாக இருக்க வேண்டும்; யூனியன் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் பரீட்சைகளுக்கு அம்மொழியை உபயோகிக்க வேண்டும் என்ற கருத்தை சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த கல்லூரி பிரின்ஸ்பால்கள் ஆதரித்துள்ளனர்.

சென்னை சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் கூட்டிய ஒரு கூட்டத்தில் மொழி பற்றி இரண்டு மணி நேரம் விவாதம் நடந்தது. ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப் பட வேண்டும் என்ற கருத்தை கல்வித் துறை நிபுணர்களும் பூரணமாக ஆதரித்தனர்.

மாணவர்களிடை காணப்படும் கட்டுப்பாடின்மை குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மொழிப் பிரச்னை குறித்து விவாதிக்க, கல்வித் துறையினரும் எதிர்க்கட்சித்தலைவர்களும் கலந்து கொள்ளும் உயர் கட்ட மகாநாடு ஒன்றை பிரதமர் கூட்டும் பட்சத்தில், அதில் மேற்கொள்ள வேண்டிய நிலை குறித்தும் இந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் காணப்படும் பொதுக் கருத்தை யொட்டிய நிலையை இத்தகைய கூட்டங்களில் உப அத்யட்சகர் மேற்கொள்ளுவதைக்கல்வி நிபுணர்கள் ஆதரித்ததாகத் தெரிகிறது.

இன்றைய கூட்டத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தி பேசாத ராஜ்யங்களைப் பொருத்த வரை, மத்திய சர்க்காருக்கும் அவற்றுக்குமிடையிலும், மற்றும் பிற ராஜ்யங்களுக்கும் அவற்றுக்குமிடையிலும் கடிதப் போக்கு வரத்து ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்றும் இக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

சென்னை சர்வ கலாசாலையுடன் இணைக்கப்பெற்றுள்ள கலை இயல், விஞ்ஞான கல்லூரிகளின் பிரின்சிபால்கள், சிண்டிகேட் அங்கத்தினர்கள், அகாடெமிக்கவுன்சிலில் அங்கம் வகிக்கும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட சுமார் 110 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தானே டிக்கட் தரும் இயந்திரங்கள்

### சர்க்கார் பஸ்களில் பரீட்சார்த்த ஏற்பாடு

சென்னை, ஏப் 1—சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து இலாகா இன்று முதல் நகரின் ஒன்றிரண்டு மார்க்கங்களில் தானாக டிக்கெட் கொடுக்கும் இயந்திரத்தைப் பரீக்ஷார்த்தமாக உபயோகிக்க ஆரம்பித்திருக்கின்றனர். கோவை கம்பெனி ஒன்றிடமிருந்து இலாகா அதிகாரிகள் தானே டிக்கெட்டு கொடுக்கும் 5 இயந்திரங்களை விலைக்கு வாங்கியுள்ளனர். அவற்றில் இரு இயந்திரங்கள் ஒரு மாதத்திற்குப் பரீக்ஷை செய்து பார்க்கப்படும். இந்த இயந்திரங்கள், மேற் கூறிய கோவை கம்பெனியால் தயாரிக்கப்பட்டவை.

இந்த இயந்திரங்களை 'ஸ்டான்ட் கண்டக்டர்கள் இயக்குவார்கள். ஒரு கம்பியைத் திருப்பியதும், தேதி கட்டணம் ஸ்டேஜ் நம்பர் முதலிய விவரங்கள் அடங்கிய டிக்கெட்டுகள் வருவிக்கப்படும். மற்றும் போகும் பிரயாணம் அல்லது திரும்பும் என்ற விவரத்தைக்காணலாம். அத்துடன் வருவிக்கப்பட்ட டிக்கெட்டுகளின் கட்டணங்களைக் கூட்டி மொத்தத் தொகையும் இந்த இயந்திரங்கள் தெரிவிக்கும். அன்றாட வசூல்களைச் சரிபார்ப்பதற்கு இந்த இயந்திர சாதனம் உதவியாக இருக்கும்.

இந்த ஏற்பாடு எவ்வளவு தூரம் வேலையைச் சுலபப்படுத்துகிறதென்பதையும், வசூல் விட்டுப் போகாமல் தடுக்கிறது என்பதையும்கவனித்து இதுநிரந்தரமாக்கப்பட்டு அத்துடன் பிரயாணிகளுக்கும் இந்த ஏற்பாடு சௌகரியமாக இருக்கிறதா என்று கவனிக்கப்படும்.

# கொசுவோடு போர்

பெ. நா. அப்புஸ்வாமி

மலேரியாக் கொசுவை எதிர்த்துப் போரிடுவதில் முதலில் வெற்றி கண்டது மக்களினம். ஆனால் அந்த வெற்றி நீடிக்கவில்லை. அதைப் புறங்கண்டது கொசு இனம். மக்களினத்தின் மருந்துக்கு மாய்வதில்லை இக் கொசுக்கள் என்ற நிலை வந்துவிட்டது. ஒரே சமயம் உலக முழுதும் ஒரே யடியாகக் கொசுக்களை ஒழித்துக் கட்ட திட்டமிடுகிறார்கள். அந்தப் போரைப் பற்றிய செய்தியை இக்கட்டுரையில் காணலாம்.

முத்துப்பிள்ளை :—முன்னால் ஒரு சிங்கம் கொசுவைச் சண்டைக்கு இழுத்தது. சிங்கம் அந்தச் சண்டையில் தோல்வி அடைந்தது என்று கூறும் கதையைக் கேட்டிருப்பீர்கள். "அற்பப் பயலே, சிறு கொசுவே! யாரென்று என்னை எண்ணினாய் நீ? சொற்பப் பலமும் இல்லாமல்... என்று கர்ஜித்த சிங்கம் கடைசியில் கொசுவுக்குத்தலைகுனியவேண்டியதாயிற்று. ஆனால் கொசுவின் வெற்றி அதிக நேரம் நீடிக்கவில்லை. வெற்றி கிடைத்த இறுமாப்பால், வென்றோம் என்ற கர்வத்தால் சற்றும் பாராமல் துள்ளிக் குதித்தது அந்தக் கொசு. துள்ளிக் குதித்த கொசு சிலந்தி சுற்றிய வலையில் பட்டு அங்குள்ள சிலந்திக்கு இரையாகி, உயிரும் அரசும் இழந்தது என்று கேட்டிருப்பீர்கள்.

இப்பொழுது நண்பர் வேங்கடாத்திரி சொல்லப் போகும் போர் இந்தக் கதையோடு ஒத்ததோ அன்றோ என்று தெரியவில்லை. அவரே சொல்லட்டும்.

வேங்கடாத்திரி:—நண்பர் பழய கதையை நினைவூட்டியது மிகவும் பொருத்தமே. நான் சொல்லப் போகும் விஷயம் இதைப் போல் அன்று. முதல் போரில் கொசு தோற்றது. இப்பொழுது மறுபடியும் அது வெற்றி யடைந்திருக்கிறது. நான் தொடக்கம் முதலே சொல்லுகிறேன்.

## மலேரியா

மலேரியா என்னும் நோய் உலகப் பிரசித்தமானது. ஒரு காலத்தில் உலகத்தின் பல பகுதிகளிலும் காணப்பட்டது. அது பெரும் பான்மையும் சதுப்பு நிலம் மிகுந்து சற்றே துர்நாற்றம் வீசிய பகுதிகளில் காணப்பட்டதால் அந்நோய்க்குக் காரணம் கெட்ட காற்று என்று நினைத்தார்கள். ஆதலால்தான்

அதற்குக் கெட்ட காற்று என்று பொருள்படும்படி மலேரியா என்ற பெயர் இடப்பட்டது.

## அந்நோயின் கொடுமை

மலேரியாவானது மிகக்கொடிய நோய். சிறுகச் சிறுக உடலில் சுரத்தை உண்டாக்கி உடலைக் கரைத்து உருக்கி, வலிமையையும் ஊக்கத்தையும் குறைத்து மக்களை வலிமை யற்றவர்களாகவும் செயலற்றவர்களாகவும் செய்து அடியோடு அவர்கள் திறத்தையும், உயிரையும் கொள்ளை கொண்டது.

உலகத்தில் மேலோங்கி நின்ற ரோம ராஜ்யத்தின் தளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அதுவே காரணம். கம்போடியாவில் தலைசிறந்த நாகரிகம் தொலைந்து போனதற்கும் அமெரிக்காக் கண்டத்தில் பல சிறந்த பண்டைக் கால நாகரிகங்கள் சில சிதைவுகளை மட்டும் விட்டுவிட்டு அழிந்து போனதற்கும் மலேரியாவே காரணம் என்கிறார்கள்.

## மஞ்சள் சுரம்

மஞ்சள் ஜுரம் என்னும் கொடிய நோயும் இத்தகைய தன்மை வாய்ந்தது. அதுவும் சதுப்பு நிலங்கள் மிகுந்த பகுதிகளிலும் புதரும் செடியும் அடர்ந்த பிரதேசங்களிலும் அதிகமாகக் காணப்பட்டது.

இந்த இரண்டு கொடிய நோய்களும் சிறிய நுண் கிருமிகளால் உண்டாக்கப்படுகின்றன என்றும், அந்தக் கிருமிகளை ஏற்று போஷித்துவளர்த்துத்தன் வயிற்றிலேயே இனம் பெருகச் செய்து பின்பு மனித உடலில் புகுத்தி அங்கே நோயை விளைவித்த தீய செயலைச் செய்வது ஒரு வகை அற்பக் கொசு என்பதும் சென்ற நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சில அற்புத ஆராய்ச்சியின் விளைவாக சில பேரறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

## அவர்களில் ஒருவர்

அவர்களில் ஒருவராகிய ராஸ் (Rass) என்பவர் நம்முடைய நாட்டில் பிறந்தவர். நம்முடைய நாட்டில் வைத்தியத் தொழிலில் அமர்ந்து வேலை பார்த்தவர். நம்முடைய நாட்டில் மிக நுட்பமான ஆராய்ச்சிகளைச் செய்து வெற்றி பெற்றவர். அனபிலீஸ் (Anapheles) ஒரு வகைக் கொசு மலேரியா நோயின் வாகனம். யமனின் தூதன் என்று அவர் கண்டுபிடித்தார். அறிந்ததை உலகறிய வெளியிட்டார்.

## நோபெல் பரிசு

அந்த அரும் செயல் உலகுக்கு உண்மை விளைவிக்கும் வாயிலாக இருந்தபடியால் அவருக்கு அதன் பொருட்டு நோபெல் பரிசு அளிக்கப்பட்டது.

## அதன் பின்பு

இவ் வகை நோய் பரவுவதற்குக் காரணம் கொசு என்று தெரிந்த பிறகு செய்த முதலாவது முயற்சி என்ன என்றால் கொசு மனிதர்

களைக் கடிக்க வொட்டாமல் உள்ளே புக முடியாதபடி கொசு வலைகளைக் கட்டினார்கள். கொசு உள்ளேபோக முடியாதபடி வலைக் கம்பிகள் போட்டு வீடுகளைக் கட்டினார்கள். பல வகையான மருந்துகளைத் தெளித்தும் தூவியும் கொசுவை விரட்ட முயன்றார்கள். அதற்குப்பிறகு அந்தக்கொசுவின் வாழ்க்கைச் சரிதத்தை நன்கு ஆராய்ந்து அதை அடியோடு அழிப்பதற்குப் பலவகையான முயற்சிகளைச் செய்தார்கள்.

## அழிப்பு முறைகள்

இவ் வகைக் கொசு பெரும் பான்மையும் ஈரம் செறிந்த தண்ணீரில் உள்ள சதுப்பு நிலங்களில் பெருகி வளர்ந்தபடியால் அவ் வகை நிலங்களில் வடிகால்களை வெட்டி நீரை அப்புறப்படுத்தியும், மண் முதலியவற்றைக் கொட்டி பள்ளங்களைத் தூர்த்தும் கொசுவின் வாழிடங்களை அழித்தார்கள். இது ஒரு பாதுகாப்பு முறை. சிற்சில வகை மீன்கள் கொசுவின் சந்ததிகளான புழுக்களை விருப்பத்தோடு தின்பதைக் கண்டு, கொசுக்கள் செறிந்த நீர் நிலைகளில் இவ்வகை மீன்களை விட்டுக் கொசுப் புழுக்களை அழித்தார்கள்.

இவற்றைத் தவிர, நீர்த் தேக்கங்களின் மீது எண்ணெய் தெளித்தால் அந்த எண்ணெயானது மிக மெல்லிய படலமாக நீர்த் தேக்கத்தின் மீது பரந்து நீர் முழுவதையும் முத்திரையிட்டதுபோல் மூடிவிடும். அதன் அடியில் வாழும் கொசுக்கள் அந்தப் படலத்தைக் கிழித்துக் கொண்டு தலையைத் தூக்கத் திறமையற்று நீரினுள்ளே மூச்சு முட்டித் திணறிப் போகும்.

வி. ஆர். சந்திரன் 20-6-57

## ஓரளவு வெற்றி

டி. டி. டி. (D. D. T.) முதலிய பல வகையான மருந்துகள் கொசுக்களை அழிக்கும் வல்லமை வாய்ந்தவை என்று தெரிந்தும், உலகத்திலே பல்வேறு பிரதேசங்களிலே இம் மருந்தை ஏராளமாகக் கையாளத் தொடங்கினர். அளவிறந்தகொசுக்கள் இறந்தன. எண்ணிறந்த மக்கள் கொசுக்கடிக்கு இரையாகாமல் தப்பினர். மக்கள் வாழமுடியாமல் கொசுக்கள் ஆக்கிரமித்து வந்த பிரதேசங்கள் மக்களுக்குச் சிறந்த வாழிடங்கள் ஆயின. இன்னும் பாக்கியுள்ள அத்தகைய பிரதேசங்களையும் இவ்வாறு நன் நிலங்களாகச் செய்து விடலாம் என்று மக்கள் எண்ண மிட்டுக் கொண்டிருந்தார்கள்.

## அப்போது

அப்போது உலகத்திலே பசியும் பிணியும் நீங்கும். செல்வமும் சுபிட்சமும் சிறக்கும் என்று உறுதியாக நம்பினார்கள்.

## ஓர் ஆச்சரியமான விளைவு

இப்பொழுது ஒரு விசித்திரமான விளைவு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை பூச்சி கொல்லி மருந்துகளால் எளிதில் அழிந்து வந்த

கொசுக்கள் இப்பொழுது அவற்றை எதிர்த்து நிற்கின்றன. எளிதில் மடியாமல் தப்பி ஓடுகின்றன. இது விஞ்ஞானிகள் எதிர்பாராத ஓர் ஆச்சரியமான விளைவு. இயற்கை வலையானது எவ்வளவு சிக்கலாகப் பின்னிக் கிடக்கிறது என்பதும் உலகத்தில் தோன்றிய உயிர், அது எத்துணை சிறியதாகஇருந்தாலும் தன் இனத்தைக் காப்பதற்கு அரும்பாடு படுகிறது. திறமையும் வாய்ப்பும் சேர்ந்தால் அந்த உயிர் தங்கி நிற்கிறது என்னும் உண்மை மீண்டும் விஞ்ஞானிகளுக்கு வலியுறுத்தப் பட்டது.

## ஆராய்ச்சி

ஆகவே, இங்கிலேயில் மர்மத்தை விஞ்ஞானிகள் தேடத் தொடங்கினார்கள் டி.டி.டி. முதலிய மருந்துகளால் தாக்குண்ட கொசுக்கள் அம் மருந்தைத் தாங்கக் கூடிய சக்தி வாய்ந்த கொசுக்களை ஈன முயன்றன. ஓரளவு அம் முயற்சி பலித்தும் விட்டது. ஆகையால், இங்கும் அங்குமாகச் சிறிது சிறிதாகக் கொசுக்களை இம் மருந்துகளால் அழிக்கும் முயற்சியைக் கையாளுவது விபரீதமான விளைவையே தரக்கூடியது. ஒரு பிரதேசத்தில் உள்ள கொசுக்கள் அனைத்தையும் ஒரேயடியில் முழுமையாக, மிக்க வலிமை பொருந்திய மருந்துகளை மிகுதியாக உபயோகித்து வேரோடு அழிப்பதே தக்க போர் முறை என்பதை இப்பொழுது கடைப் பிடித்து வருகிறார்கள். இதன் பொருட்டு நம்முடைய நாட்டிலும் மருந்தை முன்னை விட இரட்டிப்பு மடங்காக உண்டாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஜெர்மனி வகுத்துக் காட்டிய அதிர்ச்சிப் போர் முறை அற்பக் கொசுவின் மீதும் பிரயோகிக்கப் படுகிறது. கொசுவை அழிப்பது உயிர்க் கொலைதான்: ஆனால் மனித இனத்துக்குப் பல விதமான கொடிய நோய்களை விளைவித்து அதைப் பல வகையான இன்னல்களுக்கும், ஊனங்களுக்கும் உட்படுத்தும் கொசு இனத்தை அடியோடு அழிப்பதே, மக்களின் மீது அன்புள்ள அனைவரும் பின்பற்ற வேண்டிய ஜீவகாருண்ய முறை.

—தினமணி

## ‘ பணம் ’ – பலவிதம் !

ஒரு மனிதன் பணத்தைத் தேடினால், பணப் பைத்தியம்; அதை வைத்துக்கொண்டிருந்தால், முதலாளி; செலவழித்தால், ஆடம்பரக்காரன்; தேட முயலாவிட்டால், மக்கு; சிரமப்படாமல் பணத்தை அடைந்தால், பிறரைச் சுரண்டி வாழ்கிறவன்; வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுப் பணத்தைத் தேடி வைத்தவன், வாழத்தெரியாதவன்.

—‘ தி டைஜெஸ்ட் ’ மெல்போர்ன்

**பிறந்த கதை:**

# ஒரு ரூபாய் நோட்டு வரலாறு

இரண்டு உலக மகாயுத்தங்களைக் கண்டுள்ள ஒரு ரூபாய் நோட்டு இந்தியாவில் பொது மக்களிடையே மிகப் பெருமளவில் பிரபலமடைந்து விட்டிருக்கிறது. எல்லாப் பிரிவு மக்களாலும் சர்வ சாதாரணமாகக் கையாளப்பட்டு, மிக வேகமாகக் கைமாறி வரும் செலாவணி நோட்டு இந்த ஒரு ரூபாய்நோட்டுதான். இந்த நோட்டுகளின் புதிய தொடர் ஒன்று இம்மாத ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. இந் நோட்டுகளில் யூனியன் நிதிமந்திராலயத்தில் பொருளாதார விவகார இலாகா காரியதரிசி; திரு. எஸ். பூதலிங்கத்தின் கையெழுத்துப் போடப் பட்டிருக்கிறது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு ரூபாய் நோட்டுகளில் எட்டு நிதி மந்திராலயக் காரியதரிசிகள் கையெழுத்திட்டு வந்திருக்கின்றனர். 1940ஆம் வருட ஒரு ரூபாய்நோட்டுத் தொடரில் ரூபாய் நோட்டுக் கட்டுப்பாட்டதிகாரி, திரு.ஜே. டபிள்யூ. கெல்லி கையெழுத்திட்டிருந்தார்.

ஒரு ரூபாய் நோட்டு மட்டுமே இந்திய சர்க்காரினால் வெளியிடப்படுகிறது. இந்த நோட்டு ஒன்றுக்குத்தான் நாணயத்துக்குள்ள சட்ட பூர்வ அந்தஸ்து இருந்து வருகிறது. இதர எல்லா ரூபாய் நோட்டுகளும் இந்திய ரிசர்வ் பாங்கியினால் வெளியிடப்படுகின்றன. நாஸிக்கிலுள்ள சர்க்கார் நோட்டடிப்பு அச்சகத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் சுமார் 120 கோடி ஒரு ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டு வருகின்றன; ஆனால், மக்களிடையே செலாவணியில் இருந்துவரும் ஒருரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 150 கோடி தான். பழைய நோட்டுகளுக்குப் பதிலாகப் புதிய நோட்டுகளை வெளியிடுவதற்காகவே ஆண்டுதோறும் இந் நோட்டுகள் இவ்வளவு அதிகமாக வெளிடப்பட்டு வருகிறது. சுமார் 40 வருடங்கட்கு முன்பு இந்த நோட்டுகளின் சராசரி ஆயுட்காலம் சுமார் 6 மாதங்களாகத்தான் இருந்தது. ஆனால், இப்போதோ இந்த நோட்டுகளின் சராசரி ஆயுட்காலம் சுமார் ஒரு வருடமாக அதிகரித்திருக்கிறது

தற்போது புழக்கத்திலுள்ள ரூபாய் நோட்டுகள் இரு வர்ணங்களில் உள்ளன. இந்தியாவிலுள்ள மக்களுக்குப் பழக்கமாகியுள்ளன. நோட்டுகள் ஊதா நிறமானவையாகும். இரண்டாவது ரகம் பாரசிக வளைகுடாப் பிரதேசத்தில் மட்டுமே செலாவணி

யில் இருந்து வருகிறது; நோட்டுகள் நல்ல சிவப்பு நிறத்தில் வெளியிடப்படுகின்றன. இந்தச் சிவப்பு நிற ஒரு ரூபாய் நோட்டுகள் இந்தியாவில் செல்லுபடியாகமாட்டா. இந்தியாவில் உபயோகிக்கப்படும் நோட்டுகளுக்கும் பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் உபயோகிக்கப்படும் நோட்டுகளுக்கும் இடையே வித்தியாசம் இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சில ரூபாய் நோட்டுகள் இருவர்ணங்களில் வெளியிடப்படவேண்டும் என்று 1959 மே மாதம் முடிவு செய்யப்பட்டது. ஒரு ரூபாய், நோட்டுகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகி சட்ட விரோதமாக உபயோகிக்கப்படுவதன் விளைவாக இந்தியாவின் அன்னியச் செலாவணி கையிருப்புகள் விரயமாவதைத் தடுப்பதற்காகவே ஒரு ரூபாய் நோட்டுகளை இரண்டு நிறங்களில் வெளியிட வேண்டியதாயிற்று.

ஒரு ரூபாய் நோட்டுகள் முதல் முதலில், முதலாவது உலக மகா யுத்தத்தின் போது, அதாவது 1917 டிசம்பரில் செலாவணிக்கு விடப்பட்டது. அவை மக்களிடையே மிகவும் பிரபலமடைந்து, 1920 வாக்கில் செலாவணி மதிப்பு மொத்தம் சுமார் ரூ.13.5 கோடியை எட்டியது எனினும், அதற்குப் பிறகு ஒரு ரூபாய் நோட்டுகளின் புதிய வெளியீடும் நிறுத்தப்பட்டது. இந்தக் காகித நோட்டுகள் உபயோகிப்பதற்கு வசதியாக இருப்பதை முன்னிட்டு, இந்த நோட்டுகள் மீண்டும் வெளியிடப்பட வேண்டும் என்று 1926–ல் ஹில்டன்–யங் கமிஷன் சிபாரிசு செய்தது. இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகிக் கொஞ்சகாலம் வரையில் சிபாரிசு நிறைவேற்றி வைக்கப் படாமலேயே இருந்து வந்தது. இந்நோட்டுகளை வெளியிடுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கும் அவசரச் சட்டம் ஒன்று 1940 ஜூலையில் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம், அவசர நிலைக் காலத்தில் உபயோகிக்கப்படுவதற்காக 1935–இல் அச்சிடப்பட்ட ஒரு ரூபாய் நோட்டுகள் செலாவணிக்கு வெளியிடப்பட்டது. அதிலிருந்து ஒரு ரூபாய் நோட்டுகள் தொடர்ந்து உபயோகத்தில் இருந்து வருகின்றன.

—"தினமணி"

## 'அபிப்பிராயம்' – ஓர் ஆபத்து

பொதுஜன அபிப்பிராயம் என்பது அற்பத்தனமான, அதிகப்பிரசங்கித்தனமான, அநாமதேயமான ஒன்று. உப்புச் சப்பற்ற வாழ்வு வாழும் சாதாரண மனிதனை இருக்க விரும்பாத எவனுக்கும் வாழ்வை இனிப்பற்றதாகச் செய்து விடுகிறது பொதுஜன அபிப்பிராயம்.

—டீன் இஞ்ஜ்

# நம்முடைய குடும்பத்தைக் கவனிப்போம்

[டென்டன் ரிபாக்]

குடும்பத்தைப் பற்றிய ரசமான கட்டுரை இது. இன்றைய சமூகத்தில் வளரும் பிள்ளைகள் ஒழுங்கற்ற போக்கில் இருப்பதற்கான காரண காரியத்தையும், அதற்கான பரிகாரத்தையும் புகட்டக்கூடியது.

இந்தக் காலத்தில் சிறுவர்களில் பலர் போக்கிரிகளாய் இருப்பதைக் காணுகிறோம். இது உலக முழுவதும் பரவியுள்ள பிரசினை. எனவே, நம்மில் அனேகர் வீடுகளில் போக்கிரிச் சிறுவர்கள் இருக்கலாம். போக்கிரித்தனத்துக்கு இனம், நிறம், மதம், தேசம், உயர்ந்த இடம், தாழ்ந்த இடம், பணக்காரன், ஏழை என்கிற பாகுபாடு இல்லையே!

ஒரு காலத்தில் அந்தஸ்து என்பதின்றி, போதிய உணவும் வசதியான உறையுளும் இன்றி, ஒதுங்கி வாழும் கூட்டததினரிடம்தான் இந்தக் குறைபாடு இருப்பதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று? எல்லா வகுப்பினரிடமும் இந்த அவகேட்டைப் பார்க்கலாம் என்று கால ஓட்டம் காட்டிவிட்டது!

போக்கிரித்தனம் எதனால் ஏற்படுகிறது? இதற்கு எத்தனையோ காரணங்களும் ஏதுக்களும் இருப்பினும், வீட்டுச் சூழ்நிலையைத்தான் தலைமைக் காரணமாகக் கூற வேண்டும். ஆகையால் இப் பிரச்சினைக்கு விதாயம் தேடும் போது, போக்கிரிச் சிறுவர்களைக் காட்டிலும் அந்தக் குடும்பத்தை நடத்தும் பெற்றோர்களை ஆராய வேண்டி வருகிறது.

குற்றவாளிகளை விட்டுவிட்டு, குடும்பத்தையும் குடும்பத் தலைவர்களையும் ஆராய்வானேன்? எலினோர், ஷெல்டன் க்ளூக் என்னும் சமுதாய நல ஆராய்ச்சியாளர் இருவர் கண்டறிந்த உண்மையே இதற்குக் காரணம். 500 போக்கிரிச் சிறுவர்களை எடுத்துக் கொண்டு, அவர்களையும் அவர்கள்

குடும்பத்தையும் ஆராய்ந்தார்கள். அது மாதிரி போக்கிரித்தனம் அற்ற 500 சிறுவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார்கள். பத்து ஆண்டுக்குமேல் இவ்வாராய்ச்சி நடந்தது. அதன் பலனாகத் தான், விசாரணை தேடும் முறையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. அவர்கள் ஆராய்ந்தறிந்த உண்மையை நன்குணர்ந்து, பயன் எய்துவது நம்முடைய கடமை.

ஐந்து போக்கிரிச் சிறுவர்கள் இருந்தால், அவர்களில் நான்கு பேர்கள் "நாங்கள் என்ன பண்ணுகிறோம், எங்கே போகிறோம், எப்படி பொழுதைக் கழிக்கிறோம் என்பதே எங்கள் அன்னைக்குத் தெரியாது. தெரிந்தாலும், அவர்கள் கவலைப்படுவது கிடையாது" என்று சொன்னார்கள். அம்மா தான் அப்படி. அப்பா? அவருக்கும் கவலை இல்லை.

இந்த உண்மையின் அடிப்படையில் பல கேள்விகள் பிறக்கின்றன:

1. நம் சிறுவர்கள் யாருடன் பழகுகிறார்களோ, அவர்களை நமக்கு நன்றாகத் தெரியுமா?

2. அவர்கள் அனைவரும் நம் முன்னிலையில் சங்கோசமின்றி, சாதாரணமாகப் பழகுகிறார்களா?

3. சிறுவன் போகிற இடம், பழகுகிற இடம் எந்த நேரமும் நமக்குத் தெரியுமா? திடுதிப்பென்று அவனை வரவழைக்க வேண்டி ஏற்பட்டால், எந்த இடத்தில் இருப்பான் என்கிற நிச்சயம் நமக்கு உண்டா?

4. சிறுவனை நன்றாக வளர்க்கும் பொறுப்பான வேலையைத் தாய் மட்டும் ஏற்றுக் கொள்ளாமல், தாய் தந்தை இருவருமே கவனிக்கிறார்களா?

நல்ல சினேகிதர்கள் வாய்த்தால், சிறுவனும் நல்லவனாய் வளர்கிறான். கெட்ட சினேகிதர்கள் வாய்த்தால், போக்கிரித்தனம் வளர்கிறது. இவ்வுண்மையை மறவாமல், நம் குழந்தைகளுடன் பழகும் தோழர்களை நாம் அனைவரும் நன்றாக அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், நல்ல சினேகிதர்களாய் அமைந்து, நல்ல பழக்கம் உண்டாகும்படி பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

நம் குழந்தை மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடத் தொடங்கும் நாளிலேயே இந்தப்

---

## காட்டும் கருவி

தன்னை யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்று நிச்சயமாகத் தனக்குத் தெரிந்த சமயத்தில் ஒரு மனிதன் என்ன செய்கிறானோ அதுவே அவனுடைய உண்மையான பண்பைக் காட்டுகிறது.

—'லேடிஸ் ஹோம் ஜர்னல்,'
யூ. எஸ். ஏ.

பொறுப்பு நமக்கு உண்டாகிவிடுகிறது. தான் யாருடன் பழகுகிறதோ அவர்களுடைய பேச்சு, நடத்தை, பழக்கம் இவற்றைக் கற்றுக்கொண்டுவிடும். இது நல்லதுக்கும் பொருந்தும்; கெட்டதுக்கும் பொருந்தும்.

நல்ல குணம் உள்ள பிற குழந்தைகளை நம் வீட்டுக்கு வரவழைத்து, நமது குழந்தையுடன் அவர்கள் ஒன்று சேர்ந்து விளையாட ஏற்பாடு பண்ண வேண்டும். இதனால் நமக்கும் நன்மை; நம் குழந்தைக்கும் நன்மை. வீட்டை விட்டு வேறு இடங்களில் சென்று, மற்றவர்களுடன் உறவாடும்படி குழந்தையை விட்டுவிடுவது அத்தனை நல்லது அல்ல.

ஒரு வார்த்தையில், குழந்தைக்கு நல்ல கூட்டாளிகள் அமைய வேண்டும். இதற்குத் தாய் தந்தையர்கள் உதவவேண்டும். இந்த வேலை பொறுப்பான முழு வேலை. இப் பொறுப்பை வேறு யாரிடமும் ஒப்புவித்தல் கூடாது.

சிறுவன் எப்பொழுது எங்கே இருக்கிறான் என்பது அடுத்த கேள்வி. குழந்தைப் பருவத்திலிருந்தே இவ்விஷயத்தில் பயிற்சி அளிக்க வேண்டும். நாம் சொல்லும் இடத்தில் அவன் இருக்க வேண்டும். அனுமதியின்றி எங்கும் செல்லக்கூடாது. அனுமதி பெற்றுச் செல்லுங்காலை, குறிப்பட்ட நேரத்தில் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும். இது மாதிரி பழக்கம் பயிற்சியின் மூலம் வந்துவிடும். நல்லவர்கள் என்று உள்ளவர்கள் அத்தனை பேர் வாழ்க்கையிலும் இந்த ஒழுங்கு முறையைக் காணலாம். யாராய் இருந்தாலும் சரி—அவர் பிரதம மந்திரியோ, கல்வி அதிகாரியோ, மருத்துவ நிபுணரோ, போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவரோ—எவராய் இருந்தாலும் சரி, இந்த நியதியைத் தப்ப இயலாது.

குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை நல்லவர்களாய் வளர்க்கும் பொறுப்பில் அன்னை, தந்தை இருவருக்கும் சம பங்கு உண்டு. பெற்றோர்கள் என்றால் சும்மாவா? இப் பொறுப்பை நாள் முழுவதும், வாரம் முழுவதும், ஆண்டின் தொடக்கம் முதல் இறுதி வரையிலும் அவர்கள் வகித்து நிறைவேற்ற வேண்டும். பொறுப்பான இவ் வேலையை மனப்பூர்வமாக, இதய சுத்தத்துடன், விடாமுயற்சியோடு, பக்தி சிரத்தையோடு செய்பவர்களுக்கு மணியான புத்திரர்கள் வந்து வாய்ப்பது திண்ணம்.

## நிர்வாகியின் லட்சணம்—?

பொறுப்பையெல்லாம் கீழேயிருப்பவர்களுக்குக் கொடுப்பது, குற்றத்தையெல்லாம் பிறர் மீது தள்ளுவது, பெருமையையெல்லாம் தானே பற்றிக்கொள்வது—இவைதான் வெற்றிகரமான நிர்வாகியின் லட்சணங்கள்.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

இதனை அடுத்து, இன்னும் சில வினாக்கள் எழுகின்றன. இவற்றுக்கும் நேர்மையாக, ஒளிவு மறைவு எதும் இன்றிப் பதில் அளித்தல் அவசியம்.

1. சிறுவனின் முயற்சிகள், அவனது பொழுதுபோக்குகள், இவற்றைக் கவனித்து, அவனுக்கு உற்சாகம் அளிக்கிறோமா? தினத் திட்டம் போட அவனுக்கு உதவி புரிகிறோமா? விளையாடுவதற்கென்று ஒரு இடம் ஒதுக்கி, விளையாடக் கருவிகள் தருகிறோமா?

2. சிறுவனுடன் தனிமையில் இருந்து பழகுவதற்கென்று அவ்வப்பொழுது கொஞ்ச நேரத்தை ஒதுக்கி வைக்கிறோமா?

3. சிறுவன் தூங்குவதற்கு முன்னர் அவனிடம் கொஞ்ச நேரம் இருந்து பழகுவதற்காக அலுவலகம் விட்டுச் சீக்கிரம் வீட்டுக்கு வருகிறோமா? குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவது, குதித்துக் களித்துச் சிரித்து மகிழ்வது, கதைகள் சொல்லுவது, பாடிக் களிப்பது, நல்ல சங்கீதம் கேட்பது என்றெல்லாம் தினந்தோறும் ஈடுபடுகிறோமா?

4. குடும்பம் முழுவதும் ஒன்று சேர்ந்து விளையாடுவது, விருந்துண்ணுவது, உல்லாசப் பயணம் செல்லுவது, மலைச்சாரிவில், கடற்கரையில், மலர்ப் பொழிலில் பலர் கூடிக் கூட்டு உணவு அருந்துவது போன்ற மனம் இனிக்கும் காரியங்களில் ஈடுபடுவதுண்டா?

5. ஒரு வேளை உணவையாவது அனைவரும் ஒன்றாய் இருந்து உட்கொள்வதுண்டா?

6. குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடிக் கோயிலுக்குச் செல்வதும், வீட்டில் தெய்வ வணக்கம் புரிவதும் உண்டா?

இக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, நன்கு சிந்தித்துப் பார்த்தால், ஒன்றாய்ச் சேர்ந்து விளையாடி, ஒன்றாகத் தெய்வ வழிபாடு புரிந்து, ஒன்றாக உழைக்கும் குடும்பம் நன்றாக ஒன்றி வாழும் குடும்பம் என்பது தெளிவாக விளங்கும்.

ஒன்றாக இருத்தல் என்பதே சந்தோஷமான, வெற்றிகரமான குடும்ப வாழ்க்கைக்குத் தாரக மந்திரம். எதையும் கலந்து கூடி யோசித்துச் செய்யாத குடும்பத்தில் ஒவ்வொருவரும் தலைக்குத் தலை ஒன்றைச் செய்வார்கள்; தன் போக்கிலேயே செய்வார்கள். அதனால் சங்கடம்தான் மிஞ்சும்.

தன் குடும்பத்தை இன்பமான குடும்பமாக வைத்து நடத்துவது குடும்பத் தலைவனின் பொறுப்பான ஜோலி. அதன் உள்ளும் புறத்தும் அழகு பொங்க வேண்டும். சிறுவர்களும் அவர்கள் தோழர்களும் களித்து மகிழும் வண்ணம் குடும்பம் திகழ வேண்டும். தேவதூதர்கள் கண்டு மெச்சும் படியான எழிலும் கவர்ச்சியும் மிளிர வேண்டும். தெய்வீக மணம் கமழும்படியாக நடத்தும்

இத்தகைய குடும்பத்தைக் கண்டு எத்தனையோ பேர்கள் தங்கள் பழுதுபட்ட போக்குத் திருந்தி, தூய, மேலான வாழ்க்கை வாழத் தொடங்குவார்கள். இம் மாதிரி குடும்பம் தத்துவ உபதேசத்தைக் காட்டிலும் வலிமை வாய்ந்தது, பிறரை நல் வழிப்படுத்தும் விஷயத்தில்.

பிரச்சினையை இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்க்கலாம். அதற்கு இந்தக் கேள்விகள் துணை புரிகின்றன.

1. அன்னைமார்கள் தங்கள் மதலைகளைக் கட்டி அணைத்து, மார்புறத்தழுவி முத்தம் கொடுத்துப் போதிய அன்பைப் பொழிகிறார்களா ?

தாயன்பை அறியாதவன், நேசிக்கப்படாதவன், உதறிவிடப் பட்டவன், குடும்பத்துக்கு வேண்டாத சிறுவன் போக்கிரியாகிவிடுவான். அன்பு அறியாக் காரணத்தால், தாயின் அரவணைப்பு இன்மையால் குழந்தைகளுக்கு நோய் உண்டாகி, மரணம் கூடச் சம்பவிப்பது உண்டு. குழந்தையின் வாழ்வுக்குத் தான் தான் மூல காரணம் என்பதை ஒவ்வொரு அன்னையும் ஒவ்வொரு தந்தையும் மறவாமல் நினைவில் வைத்துக் கொண்டு, அவனிடம் பரிவாய், அன்பாய், ஆசையாய் இருக்க வேண்டும். குழந்தை போக்கிரியாய் இருக்கிறான் என்று அவனைக் கொடுமைப்படுத்தி, அவன் வாழ்வைத் துயர மயமாக்கி விடக் கூடாது. மாறாக, இதற்கெல்லாம் காரணம் தாங்கள் தான் என்று தங்களை நொந்து கொண்டு, அவன் மாட்டு இரக்கம் காட்ட வேண்டும்.

2. குழந்தையோடு நீண்ட நேரத்தை இன்பமாகக் கழிக்க முடிகிறதா ? இல்லை, சிறிது நேரத்துக்குள் பையன் பெருந் தொந்தரவாய், அரிக்கும் புழுவாய், தொல்லை தரும் தீமையாய் உரு மாறிவிடுகிறானா ?

3. பள்ளிப் பாடம் சம்பந்தமாகச் சிறுவன் கேட்கும் கேள்விகளுக்கு நேரக்கழிவைப் பாராமல் பொறுமையுடன் பதில் சொல்லுகிறீரா ?

ஓர் அன்னை, பள்ளிக்குச் செல்லும் தன் பிள்ளையின் வீட்டுப் பாடத்தைக் கவனிக்க அக்கறையோ அவகாசமோ இல்லாதவள். சிறுவனது தொந்தரவு பொறுக்காமல் இந்த மாதிரி பொருள் படும் கடிதம் ஒன்றை வாத்தியாருக்கு எழுதினாள் :

வாத்தியார் ஐயா,

பையன் என்னைச் சதா தொந்தரவு பண்ணுகிறான். கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுக்கிறான் என்னை. எல்லாம் நீங்கள் கேட்கிற கேள்விகள் தான். நான் கேள்விகள் கேட்டு, பதில் சொல்ல அவனுக்கு நீங்கள் உதவும்படிக்கு நிலைமையைத் தலைகீழாக மாற்றிவிட்டால், உங்களுக்கு எப்படி இருக்கும் ?

இப்படிக்கு
வேலை மிகுதியால்
அலுத்துப் போன அன்னை.

இந்த அன்னை மாதிரி இருக்கலாமா ?

4. சிறுவனின் முயற்சிகள், வெற்றிகள் இவற்றைக் கண்டு மகிழ்ந்து பாராட்டுகின்றோமா ?

அவன் செய்யும் காரியங்களில் கவனம் செலுத்துவதுண்டா ? காரியங்களைத் திறமையாகச் செய்யும் போது, புகழுகிறோமா ? திறமைக் குறைவாய்ச் செய்யும் போது, தட்டிக் கொடுத்து, திறமையை வளர்க்கிறோமா ?

5. தனக்கு என்று கொடுக்கப் பட்டுள்ள வீட்டு வேலையைச் சிறுவன் ஒழுங்காகச் செய்கிறானா ?

குடும்பத்தில் ஒவ்வொருவரும் இன்னின்ன அலுவல்களைக் கவனிக்க வேண்டும் என்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா ? ஒவ்வொரு காரியத்தையும் எவ்வாறு செய்வது என்று சொல்லித் தந்தோமா ? காரியத்தில் தவறு நிகழ்ந்தால், திருத்திச் சீருறுத்தும் வழியை எடுத்துச் சொன்னோமா ? சுறுசுறுப்பான பழக்கங்களும் பொறுப்பு உணர்ச்சிகளும் இப்பொழுது தான் தொடங்குகின்றன. சின்ன வயதிலேயே இம் முயற்சியை மேற்கொண்டு, தொடர்ந்து, விடாமல் நடத்த வேண்டும்.

கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், முறைமை, நேரம் தவறாமை— இவற்றுக்கெல்லாம் உரிய ஸ்தானம் உண்டு. சீராய் அமைந்த இன்பமான குடும்பத்தில், இவற்றைக் குறித்துக் கீழ்க்கண்ட கேள்விகள் எழுகின்றன :

1. சிறுவனது திறமையில், குண நலத்தில் நம்பிக்கை இருக்கிறதா ?

2. அவனுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை அறிவுக்குப் பொருந்தும் அளவுக்குக் காப்பாற்றுவது உண்டா ?

3. ஒரு நாளுக்குக் கடுமை, மற்றொரு நாள் செல்லம் என்று இல்லாமல், எப்பொழுதும் ஒரே சீராக அவனை ஒழுக்க நெறியில் பழக்குகிறோமா ?

4. தண்டிக்கும் போது, காரணத்தை உணர்ந்து கொண்டு, அப்பா தண்டிப்பது நியாயம் என்று சிறுவனுக்குப் படுகிறதா ?

5. தவறு ஒன்று நிகழ்ந்து விட்டால், அதையே பன்னிப் பன்னிப் பேசாமல், "சரி" என்று விட்டுவிடுகிறோமா ?

6. சிறுவனின் அச்சம், மனவேகக் குழப்பம், தோல்வி இவற்றை உண்மையிலேயே நன்கு புரிந்து கொண்டு, அவனுக்கு உதவியாக இருக்கிறோமா ?

7. சாப்பாடு, குளியல், உறக்கம்—இவைகளில் ஒரு ஒழுங்கு முறையை வீட்டில் அனுஷ்டிக்கிறோமா ?

8. சிறுவனின் படிப்பு, விடுமுறை இவற்றைக் குறித்து, முன்னரே யோசனை பண்ணித் திட்டம் தயாரிப்பதுண்டா ?

இக் கேள்விகள் பெற்றோர்களின் மன வளர்ச்சியைத் தெரிவிக்கும் கைகாட்டிகள். அவர்கள்

மன வளர்ச்சியைப் பொறுத்தே அவர்கள் குழந்தைகளின் மன வளர்ச்சியும் இருக்கும். வேண்டாத நிகழ்ச்சிகள் நேர்ந்துவிட்டால், அவற்றை ஒவ்வொன்றாக, அவைகள் நிகழும் வரிசைக் கிரமத்தில், கவனித்துச் சமாளிக்க வேண்டும். எல்லாவற்றையும் பின்னால் கவனிப்போம் என்று குவித்து வைத்துக்கொள்ளக் கூடாது. கோபமும் ஆத்திரமும் குமுறி வெடிக்க, அந்த வேகத்தில் கவனிப்பதும் தவறு. ஒரு நிகழ்ச்சிக்கு ஆகவேண்டியதைப் பண்ணித் தீர்த்துவிட்ட பிறபாடு, அதனை மறந்துவிட வேண்டும்; பழையபடி குடும்பத்தில் எல்லாக் காரியங்களும் அமைதியாய் நடக்க வேண்டும். அவ்வாறன்றி, விதாயம் காணாமல் விட்டு வைப்பதே, அன்னியர்கள் முன்னிலையில் அதை விவரிப்பதோ ஒழுங்கு முறையாகாது; அன்பின்மையையும் மன வளர்ச்சிக் குறைவையும் அது காட்டிவிடும்.

அன்பான, பொறுமையான, இரக்கம் மிகுந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் அச்சம், ஆத்திரம், தோல்வி இவற்றின் காரணங்களைச் சாவகாசமாய் அறிய முயலுவார்கள். அப்படி அறிந்த பின்னர் தான் என்ன செய்வது என்பது புலனாகும். இந்த முறையினால் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை உதயமாகும். அதனால் எத்தனையோ தொல்லைகள் தவிர்க்கப்படும். தனக்கு உதவி தேவைப்படும் போதெல்லாம், சிறுவன் தயக்கமின்றி, அச்சமின்றித் தாய் தந்தையரை அணுகவும் செய்வன்.

9. வீட்டில் நாம் இல்லாத போது, குழந்தைகளைக் கவனிக்க வேறு ஏற்பாடு செய்கிறோமா?

வீட்டை விட்டு வெளியில் எத்தனை நேரம், எத்தனை தடவை தங்குகிறோம்? நாம் வீட்டில் இல்லாத சமயம், அங்கு என்னென்ன நிகழ்கின்றன?

10. நம் மனைவி (அல்லது நம் கணவர்) குழந்தைக்கு ஓர் எடுத்துக்காட்டாக நடந்து கொள்கிறாளா? (கொள்ளுகிறாரா)

இது நம் கவனத்தில் மிகுதியாக வேண்டும் பெரிய பிரச்சினை. ஏனெனில், குழந்தைகள் நல்ல வழி கெட்ட வழி இரண்டிலுமே பெற்றோர்களைப் பின்பற்றுவார்கள். கண்ணால் பார்த்தது அவர்களது பசுமையான நெஞ்சில் "சப்"பென்று ஒட்டிக்கொள்ளும், பிறகு, நம் மாதிரி அவர்கள் காரியம் செய்வதைப் பார்த்து நாம் வியக்கத் தேவை இல்லை.

நம்மையும் நம் குடும்பத்தையும் பற்றிய இவ்வாராய்ச்சியைக் கடைசியாக ஒரு கேள்வி கேட்டு முடிக்கலாம்:

11. தன் வயதுக்கொத்த காரியங்களில் சிறுவன் கவனம் செலுத்துமாறு ஊக்கம் அளிக்கிறோமா?

பள்ளிக்கூடத்தில், தேவாலயத்தில், சமுதாயத்தில் பல காரியங்

கிரமங்கள் நடக்கும். இவற்றில் எல்லாம் சிறுவன் உரிய பங்கு கொள்ளவேண்டும். இல்லையேல், தனக்கென்று ஒரு திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு விடுவான். அது நல்ல திட்டமா? கெட்ட திட்டமா? யாருக்குத் தெரியும்?

நல்ல குணங்கள் அமைந்த குழந்தைகள் இடுதிப்பென்று, எதேச்சையாக வந்து வாய்ப்பவை அல்ல. குடும்பம் நல்ல குடும்பமானால், அதில் வளரும் குழந்தையும் நல்ல குழந்தையாய் இருக்கும். வளர்ச்சிக்கான சூழ்நிலை நிறைந்த குடும்பமானால், குழந்தையும் செழிப்பாக வளரும்.

சீர்பட்ட வாழ்க்கை நடத்தும் குடும்பத்தில் குணம் கெட்ட குழந்தைகள் வந்து பிறப்பதில்லையா? இக் கேள்விக்கு எலினோர், ஷெல்டன் க்ளூக் இருவரும் பதில் உரைக்கின்றனர்: "நூற்றுக்கு மூன்று பழுதுண்டு." சீர்குலைந்த குடும்பத்தில் தோன்றும் குழந்தைகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு பேர்கள் போக்கிரியாய் விடுவார்களாம்.

"சிறுவர்கள் போக்கிரியாய் இருப்பது அவர்களைப் பெற்றவர்கள் போக்கிரியாய் இருப்பதால் தான்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார் புல்டன் ஜே. ஷீன் என்கிற பாதிரியார். "சிறுவர்கள் வீட்டுக்கு வெளியில் அத்தனை கெடுவதில்லை; வீட்டுக்குள்ளே பெற்றோர்களின் கோபதாபக் கனல் வேகங்கள் தான் சிறுவர்களை மிகுதியாகக் கெடுத்துக் குட்டிச் சுவர் பண்ணிவிடுகின்றன" என்கிறார். இந்தப் பாதிரியார். இன்னும் அவர் கூறுகிறார்: "போக்கிரிச் சிறுவர்களில் ஐந்து பேரை எடுத்துக்கொண்டால், அவர்களில் மூன்று பேர்கள் சதா சண்டையும் பிணக்குமாக உள்ள குடும்பத்தில் வந்து பிறந்திருப்பார்கள். பத்துப் பேரை எடுத்துக்கொண்டால், ஏழு பேர்கள் உண்மையான குடும்ப வாழ்க்கை நடத்தாத வீடுகளில் பிறந்தவர்களாய் இருப்பார்கள். சிதைந்த குடும்ப வாழ்க்கையின் பயனாய் விளங்குபவர் பலர். இவர்களுக்கெல்லாம் மதச் சார்பான பயிற்சியே அளிக்கப்பட்டிருக்காது."

சரி, இந்தப் பிரச்சினையினின்றும் மீளுவது எங்ஙனம்? அதற்கு என்ன செய்வது?

இதோ சில யோசனைகள்:

அ. தீம்புக்கெல்லாம் வேரான வீட்டிலேயே காரியத் திட்டத்தைத் தொடங்க வேண்டும்.

ஆ. மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் குறித்துப் பெற்றோர்கள் பக்தி சிரத்தையுடன் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் நேர்மையான, சரியான பதில் சொல்ல வேண்டும். அப்படி இருந்தால் நல்லது, இப்படி இருந்தால் நல்லது என்றெல்லாம் கருதிக் குழப்பமுறாமல், உள்ளதை உள்ளவாறு உணர்ந்து, பதிலைச் சொல்ல வேண்டும்.

இ. நிலைமை தெளிவாக மனதில் பட்டவுடன், அதனைத் திருத்தி அமைக்கவோ, விலக்கி நீக்கவோ எத்தனிக்க வேண்டும். தேவைப்பட்டால், அறிஞர்களின் உதவியை அவ் விஷயத்தில் நாடலாம். தெய்வக் கிருபையை வேண்டுவதும் நலம்.

ஈ. குழந்தைகளை மனப்பூர்வமாக நேசிக்க வேண்டும். அன்பின் வர்ஷத்தில் அவர்களைத் தினந்தோறும் முழுக்காட்ட வேண்டும்; இந்தத் தூய அன்பு அவர்களைக் குடும்பத்துடன், பெற்றவர்களுடன் இறுகப் பிணைக்கும். "நாம் இக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; நம்மை விரும்புகிறவர்கள், நம் காரியத்தை மெச்சுகிறவர்கள் இருக்கிறார்கள்" என்கின்ற உள்ளுணர்வு அவர்களுக்கு உண்டாக வேண்டும்.

உ. முழுப் பொறுப்பை வகிக்கும் அறிவும் ஆற்றலும் இருந்தால் ஒழிய, குழந்தைகளைப் பெற்று, குடும்பச் சுமையாக்குவது உகந்ததல்ல. பிறக்கும் குழந்தையின் வளர்ச்சிக்கு நல்ல தாய் தந்தையரும் அழகான குடும்பமும் தேவை.

மேலே கண்ட கேள்விகளில் பெரும்பாலானவற்றுக்கு "இல்லை" என்ற பதில் அமையுமானால், அந்தக் குடும்பம் ஒரு தொல்லைக் குடும்பம் தான். போக்கிரிக் குழந்தைகளின் வளர்ப்புப் பண்ணையாய் அமைந்து விட்ட இத்தகைய குடும்பத்தால், சமுதாயத்துக்கு இடைஞ்சல். உடனே திருத்தி அமைக்கும் வேலையைத் தொடங்கிவிட வேண்டும். அப்பொழுது தான் குழந்தைகள் திருந்தி உருப்படுவார்கள்.

பாதிக் கேள்விக்கு "இல்லை" என்ற பதில் கிடைத்தால், ஒவ்வொரு விஷயத்தையும் உற்றுக் கவனித்து, சீரமைப்புக் காரியத்தைத் தொடங்க வேண்டும். முக்கியமானதை முதலில் கவனித்து, ஒழுங்குபடுத்த வேண்டும். குடும்பத்தில் ஒட்டி வாழும் அனைவரையும் கலந்து ஆலோசித்துக் காரியத்தைத் திறம்படச் செய்ய வேண்டும். அவ்வாறு முயன்றால், சீர் குலைவு நீங்கி, சீரமைப்பு வந்துவிடும்.

எல்லாக் கேள்விக்குமே "ஆம்" என்னும் பதில் கிடைத்தால், அது ஒரு பெரிய அதிர்ஷ்டம் தான். அருமையாய் அமையும் இந்த அதிர்ஷ்டத்தைக் காப்பாற்றிக்கொள்ள எப்போதும் மன விழிப்போடு இருக்க வேண்டும். இப்பொழுது உள்ளதுபோல் நல்வழியில் நின்று, நல்ல செயலும் நல்ல நினைவுமாக வாழவேண்டும்.

"இறைவா! உலகத்துத் தலைவா! உயிர்களுக்குறுந் துணைவா! என் நெஞ்சில் புகுவதையும் நெஞ்சினின்று புறப்படுவதையும் சுத்தமாய், பரிசுத்தமாய் வைத்துக் காக்க வேண்டும்" என்று நித்தமும் பிரார்த்தனை புரிவது அவசியம்.

— "நல்வழி"

இன்றைய தமிழ் நாட்டில் கல்வி பெற்றிருக்கும் வளர்ச்சியை விளக்கிக் கூறும் கருத்தோவியம் இது.

# நாட்டில் கல்வி முன்னேற்றம்

**என். டி. சுந்தரவடிவேலு**
(தமிழ்நாடு கல்வித்துறை இயக்குனர்)

சுதந்திரம் நமது பிறப்புரிமை. பல ஆண்டுகள் காந்தியடிகளின் தலைமையில் அறப்போர் நடத்தி அச்சுதந்திரத்தைப் பெற்றோம். விடுதலை, வறுமையையும், மக்களின் இன்னல்களையும் ஒழித்து மனித சமுதாயத்திற்கே உபகரிக்க வேண்டுமென்று தேசிய கவி பாரதியார் பாடியுள்ளார். நம் நாட்டுத் தலைவர்களும் விடுதலை, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி என்னும் உண்மையை உணர்ந்தனர். எனவேதான் அவர்கள் வறுமையையும் அதனால் வரும் இன்னல்களையும் போக்க வழிவகைகள் செய்துள்ளனர். நாட்டு முன்னேற்றத்திட்டங்கள் வகுத்து அவற்றை நிறைவேற்ற முனைந்துள்ளனர்.

எல்லா வளர்ச்சிக்கும் ஆணிவேர் கல்வி. இன்றைய சமுதாயத்தில் பண்பு நிறைந்த நல்வாழ்வு வாழ அது இன்றியமையாதது. இதையறிந்தே நாம் கல்வி வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்துகிறோம். சுதந்திரத்தைப்போலவே கல்வியும் எல்லோருக்கும் பிறப்புரிமை. அதைப்பெற முடியாதபடி சாதியோ, சமயமோ, பொருளாதார நிலையோ குறுக்கே நிற்கக்கூடாது. ஆகவே எல்லோருக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற நம் மாநில அரசு வழிவகை செய்துள்ளது.

முதற்படியாக எல்லாக் குழந்தைகளுக்கும் எட்டும் நிலையில் போதிய பள்ளிகளை ஏற்படுத்திற்று. முன்னூறுக்குக் குறையாத மக்கள் தொகையுள்ள ஊர்களிலெல்லாம் தொடக்கப் பள்ளிகள் தோன்றின. தொடக்கப் பள்ளிக்குச் செல்ல யாரும் ஒரு மைலுக்குமேல் நடக்க வேண்டியதில்லை என்ற நிலை உண்டாயிற்று. சில ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டின் கல்வி நிலையங்களின் இருப்பைக் கவனித்தபோது ஆயிரக்கணக்கான ஊர்களில் தொடக்கப்பள்ளிகூட இல்லையென்ற உண்மை தெரிந்தது. இவ்வூர்களிலெல்லாம் தொடக்கப் பள்ளிகள் தொடங்க முழுமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. பயன் என்ன ?

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றபோது இன்றைய தமிழ் நாட்டுப் பகுதியில் இருந்த தொடக்கப்பள்ளிகள் 15,303. 1964–ல் அவ்வெண்ணிக்கை

31,000 ஆகப் பெருகியது இன்று தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளியில்லாத சிற்றூரே— 300-க்கு மிகக் குறைந்த மக்கள் தொகையுள்ள ஊர் நீங்கலாக— இல்லையென்று பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் நன்னிலை ஏற் பட்டுள்ளது.

அதிக பள்ளிகள் தொடங்கி ஞல் மட்டும் போதாதல்லவா ? ஆகவே அதே சமயத்தில் எல்லாப் பள்ளி வயது பிள்ளைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கான நட வடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. குடியிருப்பிற்கு ஒரு மைலுக்குள் பள்ளிக்கூடம் ஏற் பட்டதால் மாணவர்களின் எண் ணிக்கை ஓரளவு உயர்ந்தது. ஆனல் முழுப் பலனும் கிட்ட வில்லை. ஏன் ? வயிற்றுப்பாடே பெரும்பாடாக உள்ள பல்லா யிரம் குழந்தைகளுக்குக் கல்வி யைப்பற்றி நினைக்கக்கூட முடிய வில்லை. உலகிலுள்ள முன்னே றிய நாடுகளெல்லாம் பள்ளிக்கூட வயதுள்ள எல்லாச் சிறுவர் சிறுமி யரையும் பள்ளிக்கூடத்தில் சேர்ப் பதிலும், சேர்க்கப்பட்ட பிள்ளை கள் தவருது பள்ளிக்கு வரும் படிச் செய்வதிலும் எப்படி வெற்றி பெற்றன ? தண்டனைகள் மூலமா ? அல்ல. பிள்ளைகள் பள்ளிக்கு வரும்படி ஊக்குவிக்க வழிவகைகள் செய்ததால். இலவச மதிய உணவு அளித்தல் அவ்வழி களில் ஒன்று.

இந்தியர்களாகிய நமக்கு அன்னதானம் புதிதல்ல. அது நம் குருதியில் ஊறிக்கிடக்கும் ஒரு பண்பு. வெளியில் அன்ன தானம் செய்தால் உயிர் மட்டும் கொடுத்த பலன். பள்ளியிலுள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு அன்ன மிட்டால் உயிரையும் கொடுத்து கல்வியையும் வளர்த்த பலன். ஒரு கல்லிலே இரு மாங் காயை வீழ்த்துவதுபோல். இதையுணர்ந்த தமிழ்நாட்டு மக் கள் 1956ஆம்ஆண்டில் பள்ளியில் பயிலும் ஏழைக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு அளிக்க முன் வந்தனர். ஒருவரோடொரு வர் போட்டி போட்டுக் கொண்டு தாராளமாக நன்கொடை வழங்கி னர். இவ்வியக்கத்தின் வளர்ச்சி யைக் கண்ட தமிழ் நாட்டரசு 1957–ஆம் ஆண்டில் இதை அர சினர் திட்டமாக ஏற்று நடை முறைச் செலவில் ஒரு குறிப் பிட்ட பகுதியை மான்யமாக வழங்க முன் வந்துள்ளது.

மதிய உணவு அளிக்க ஏற்பாடு செய்த பிறகுங்கூட பள்ளிகளில் எல்லாப் பெண்களையும் சேர்க்க முடியவில்லை. உடுத்த, போதிய உடை இல்லாததே பெண்கள் பள்ளிக்கு வரத் தயங்குவதற்குக் காரணம் என்று தெரிந்தது. ஆகவே ஏழை மாணவிகளுக்கு இலவச உடை அளிப்பது அவசிய மாயிற்று.

உடைக் கொடையும் தமிழர் களுக்குப் புதிதல்ல. பற்பல சமயங்களில் ஏழைகளுக்கு உடை தானம் செய்வது நம் மரபு. அவ் வுடைக் கொடையைக் கல்விக் கூடங்களின் பக்கம் திரும்பி விடு வதின் மூலம் சிறுமிகளின்

மானங்காத்து அவர்களுக்குக் கல்வி புகட்டவும் உதவுகிறோம். இலவச உடையளிக்கும் இயக்கம், இலவச் சீருடையளிக்கும் இயக்கமாயிற்று. ஏழைக் குழந்தைகளும் பணக்காரக் குழந்தைகளும் ஒரேவித உடையணிவது பிள்ளைகளிடம் சமத்துவ உணர்ச்சியை வளர்க்க உதவுகிறது. இலவசச் சீருடை இயக்கம் மக்கள் ஆதரவு பெற்று நம் மாநிலத்தின் மூலை முடுக்குகளெல்லாம் பரவியுள்ளது.

இலவச மதிய உணவும், உடைக் கொடையும் கண்டறியாத அளவில் ஏராளமான ஏழைப்பிள்ளைகளைப் பள்ளியில் கொண்டுவந்து சேர்த்தன. அன்றியும் சேர்ந்த பிள்ளைகள் இடையில் நின்றுவிடாது தொடர்ந்து படிக்கும்படி செய்யவும் உதவுகின்றன. இடையிலே படிப்பை நிறுத்திவிடும் பிள்ளைகளின் எண்ணிக்கை வரவர குறைந்துகொண்டே வருவது கண்கூடு.

பள்ளியில் சேர்ந்தவர் எதுவரை கற்கவேண்டும் என்ற கேள்வி பிறந்தது. இன்றைய உலகம் விரைவாக முன்னேறிக் கொண்டேயிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் ஐந்து வகுப்பு வரையில் கற்றால் போதுமா? மேலும் படிக்க வேண்டுமென்றால் எதுவரை? எட்டாவது வகுப்பு வரையிலா, அதற்கு மேலுமா? இன்று விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் வியக்கத்தக்க வளர்ச்சியைக் காண்கிறோம். இந்நிலையில் ஐந்து வகுப்புப் படிப்பு ஒன்றுக்கும் உதவாது. எட்டு வரையில் எட்டிப் பார்த்து நின்றாலும் முழுமையான மனிதனை முடியாது. பதினோராவது வகுப்பு படித்து முடிக்காத இளைஞன் பொருளாதாரத் தற்கொலை செய்துகொள்ளுகிறான் என்ற கூற்று இன்று முழுக்க முழுக்க உண்மையாகிறது. பதினோராவது வகுப்புவரையிலாவது படித்து முடித்தால்தான் காலமெல்லாம் பயனளிக்கும் கல்வியைப் பெற முடியும் என்பதை உணர்ந்த தமிழ் நாட்டு அரசாங்கம் பதினோராவது வகுப்பு முடிய கல்வியை இலவசமாக்கினர். இதற்கு, சாதிச் சான்று தேவையில்லை; வருமானச் சான்றிற்கு அலையவேண்டியதில்லை. நம் மாநிலம் இம்முன்னேற்ற நடவடிக்கையில் முன்னணியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

எல்லோரும் உயர்நிலைப் பள்ளிக்கூடக் கல்வி பெறவேண்டும். ஆகவே உயர்நிலைப்பள்ளிகள் அதிகமாகத் திறக்கப்பட்டன. உயர்நிலைக்கல்வி பெற யாரும் ஐந்து மைல்களுக்கு மேல் செல்லவேண்டிய நிலை இருக்கக் கூடாது. இதை மனதிற் கொண்டு திட்டமிட்டு உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இதற்கு உதவியாக உள்ளூர் மக்கள் மகிழ்ச்சியோடு பணமும் பொருளும் வழங்கினர். 1947–இல் தமிழ்நாட்டுப் பகுதியில் 471 உயர்நிலைப்பள்ளிகளே இருந்தன. அவற்றில் பயின்ற மாணவ மாணவியரின் எண்ணிக்கை

2,36,000 மட்டுமே. இன்றோ இம் மாநிலத்தில் 2,179 உயர் நிலைப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோரின் எண்ணிக்கை 11–லட்சம்.

மடமடவென்ற கல்வி வளர்ச்சி, பள்ளிக்கூடங்களோடு நின்றுவிடவில்லை. சுதந்திரம் கிடைத்த பின் கல்லூரிக் கல்வியும் பரவியுள்ளது. 1947–இல் தமிழ் நாட்டுப் பகுதியில் 24 கல்லூரிகள் 16,665 பேரோடு நடந்தன. இன்று 79 கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் கற்போரின் எண்ணிக்கை 64,000. இக்கல்லூரிகளை நடத்தும் செலவில் மிகப்பெரும்பகுதி அரசினர் மானியம் என்பதை ஈண்டு கூறாமல் இருக்க முடியாது.

தமிழ்நாட்டில் எல்லா நிலைக் கல்வியிலும் பெரும் வளர்ச்சியைக் காண்கிறோம். ஆகவே 'அறிவுடையார் எல்லாம் உடையவர்' என்ற வள்ளுவர் வாக்கை நம்பும் தமிழர்கள் பூரிப்படைவதில் வியப்பில்லையே!

அரசினரும் பொது மக்களும் பெருநிதி தந்து உதவியதனால் அல்லவா இத்தனை அரிய பெரிய சாதனைகளைக் காண முடிந்தது. 1947–இல் அரசினர் கல்விக்காகச் செலவிட்டது 3 கோடி ரூபாய். ஆனால் இவ்வாண்டில் (1964–65) வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கியுள்ளது 29.45 கோடி ரூபாய்.

கல்விக்காக அரசினர் ஒதுக்கும் நிதி ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. அவ்விதம் பொது மக்கள் நிதியுதவியும் பெருகிக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டில் மதிய உணவுத் திட்டத்திற்கு மட்டும் பொதுமக்கள் உதவும் தொகை 120 லட்சம் ரூபாயாகும்.

பொதுமக்கள் மற்றுமொரு பேருதவியைச் செய்துள்ளனர். தரமான கல்வியையே எல்லோரும் எதிர்பார்ப்பர். தரமான கல்விக்குப் போதுமான, ஏற்ற இடம் வேண்டும். எல்லாப் பள்ளிகளுக்கும் போதிய தளவாட சாமான்கள் வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்களின் அறப்பணி முழுப் பலன் கொடுக்கும். ) இத்தேவைகளனைத்தையும் நிறைவேற்ற பெருமுயற்சி எடுக்கவேண்டியதாயிற்று. ஆங்காங்குள்ள பொது மக்களின் நிதி உதவி நாடப்பட்டது. 1958ஆம் ஆண்டில் பள்ளிச் சீரமைப்பு இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டது. இத்தகைய இயக்கம் பண்டு அறியாதது. எனினும் விரைவில் திக்கெட்டும் பரவியது. அதன் பயனாக 30,000 பள்ளிகள் நன்மையடைந்துள்ளன. பொதுமக்களின் நன்கொடையால் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டட வசதிகளும் கருவி வசதிகளும் பெற்றுள்ளன.

ஆயினும் எல்லாப் பள்ளிகளும் இடம், பொருள் தேவைகளில் இன்னும் தன்னிறைவு பெறவில்லை. அந்நிலையை அடைய இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து முயலவேண்டும். அதுவரையில் சில பள்ளிகளையும்

அவற்றில் கற்கும் மாணவர்களை யும் கவனியாது தம் போக்கில் விட்டுவிடலாமா? துணைக் கருவி களும் ஆற்றல்மிக்க ஆசிரியர் களும் நிறைந்துள்ள உயர்நிலைப் பள்ளிகள் அக்கம் பக்கத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளுக்குக் கைகொடுக்க வேண்டாவா? இதற்கும் ஒரு திட்டம் காணப் பட்டது. அது "ஞானத் தந்தை" திட்டம். இத்திட்டத்தின்படி உயர்நிலைப்பள்ளிக்கூடங்கள் ஒவ் வொன்றும் அண்டையிலுள்ள சில உயர் தொடக்கப் பள்ளி களுக்கு ஞானத் தந்தை. உயர் தொடக்கப் பள்ளிகள் ஞானத் தந்தையோடு தொடர்பு கொண்டு அனுமதி பெற்று அங்குள்ள நூலகம், சோதனைக்கூடம் ஆகிய வற்றைப் பயன்படுத்தலாம். ஆசிரி யர்களின் ஆலோசனையையும் பெற்று உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், தங்கள் தொழில் திறமையை வளர்த்துக்கொள்ள லாம். அதன் மூலம் தொடக்க நிலைப் பள்ளிகளின் தரத்தையும் உயர்த்தலாம். இவ்வியக்கம் அறுகுபோல் வேரோடி நல்ல பணியாற்றத் தொடங்கியுள்ளது.

இத்தனை முறைகளும் வழி களும் கல்வியை வளர்க்கின்றன. ஆனால் இன்னொரு சிக்கல் உளது. பல மாணவர்கள் வீட்டில் படிக்க வசதியற்றவர்கள். பெற்றோர் உதவி கிடையாது. அத்தகை யோருக்குப்பள்ளிகளேகுறைவை நிறைவாக்கி நல்ல கல்விக்கு வழி கோல வேண்டும். எனவே, "மேற்பார்வைப் படிப்புத் திட் டம்" உருவாயிற்று. கல்விக் கூடங்களிலேயே விளக்கு வசதி கள் செய்துள்ளனர். மாணவர்கள் அங்குச் சென்று கற்கின்றனர். அப்படிப்பை மேற்பார்வையிட வும் மாணவர்களின் ஐயங்களைப் போக்கி வழிகாட்டவும் ஏராள மான ஆசிரியர்கள் ஆர்வத்தோடு முன் வந்துள்ளனர். இப்படிப் பட்ட ஆசிரியர்கள் வெளிநாடு களிலிருந்து வரும் அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றிருப்பதில் வியப்பென்ன?

ஆசிரியர்களின் நலன்கள் கவ னிக்கப்படுகின்றனவா என்று கேட்கிறீர்களா? ஆசிரியர்களின் நலனில் தமிழ்நாட்டு அரசு எப் போதும் அக்கறையும் ஆதரவும் காட்டி வந்துள்ளது. சம்பளம் கொடுத்துத்தான் படிக்க வேண்டு மென்று இருந்த காலத்திலேயே ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பதினோராவது வகுப்புவரை இல வசக் கல்வி அளித்தது நம் அரசு. அவர்களுக்குள் நிர்வாக வேற் றுமை காரணமாக இருந்துவந்த சம்பள வேற்றுமையை நீக்கிவிட் டது. தனியார் நிர்வாகத்தில் இருந்தாலும் பிறதுறை நிர்வாகத் தில் இருந்தாலும் இப்பொழுது ஒரே சம்பளம். படிப்படியாக ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி வந்திருக்கிறது. ஊதி யத்தில் பெரும் பகுதி பஞ்சப்படியாகவே இருந்ததை மாற்றி மிகப் பெரும் பகுதி யைச் சம்பளமாக்கி ஆணை பிறப்பித்துள்ளது. இத்தனைக்கும் சிகரமாக மூன்று நன்மைத் திட்ட

மொன்றை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. முன்பெல்லாம் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் போது பிராவிடண்ட் பண்டு சேமிப்பை மட்டுமே பெற்றனர். 1955இல் இருந்து பிராவிடண்ட் பண்டு தொகையோடுகூட ஒவ்வொரு மாதமும் ஓய்வு ஊதியமும் பெறுகின்றனர். ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஆயுள் ஒப்பந்தம் கட்டாயமாயிற்று. எனவே இன்றைய ஆசிரியருக்கு, பிராவிடண்ட் பண்டு சேமிப்பு, ஆயுள் ஒப்பந்தப் பணம், மாத ஓய்வுப் பணம் ஆகிய மூன்று நன்மைகள் உள்ளன.

இத்தகைய பெரு முயற்சிகளுக்கும் இடையே மற்றொன்றும் தேவை. அது என்ன? மாணவ மாணவிகளின் ஒரு மனப்பட்ட கல்வி ஈடுபாடு. அவர்களது கவனம் கண்ட கண்ட ஈடுபாடுகளில் சிதறி விடக்கூடாது. இன்றைய மாணவர்கள் நாளைய மன்னர்கள். அவர்களுடைய சக்திகளை விரும்பத்தகாத செயல்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபடுத்தக்கூடாது. நாம் இவ்விஷயத்தில் போதிய கவனம் செலுத்த வேண்டும். பொதுமக்களின் உறுதிப்பாடும் முழுமன ஒத்துழைப்பும் கிடைத்தால் நம்மால் ஆகாத ஒன்றும் உள்ளதோ? அதை இந்நாட்டு மக்களிடம் வேண்டிக் கேட்பதும் உரிமையோடு பெறுவதும் அதிகமா?

இன்று ஆசிரியர்கள் ஒழுங்கை நிலைநிறுத்தத் தன்னந் தனியே பாடுபட வேண்டியிருக்கிறது. அன்பர்களே, நீங்கள் அவர்களுக்கு உங்கள் விலைமதிப்பற்ற பேராதரவை அளிக்க வேண்டாவா? ஒழுங்கு முக்கியமானதல்லவா? சிந்தித்து முடிவு செய்யுங்கள்.

(மதராஸ் அ. இ. ரே. நிலையத்தில் ஒலிபரப்பானது)

## இதுவும் அபிப்பிராயந்தான்

பிரபல நாடக ஆசிரியர் வால்டர் ஸ்லெஸ்க் என்பவர்; அவரை ஒரு வாலிப ஆசிரியர் தம் முதல் நாடகத்தைப் பார்த்து அபிப்பிராயம் சொல்ல அழைத்தார்.

விளக்குகள் அணைந்தன; நாடகம் தொடங்கியது. நாடகம் நடந்துகொண்டேயிருந்தபோது, பிரபல ஆசிரியர் தூங்கியபடி இருந்தார்.

விளக்குகள் மறுபடியும் ஒளி வீசின. பிரபல ஆசிரியர் இன்னமும் விழிக்கவில்லை. அவரைத் தட்டி எழுப்பினார், வாலிப ஆசிரியர்; "அபிப்பிராயம் சொல்லவே உங்களை நான் அழைத்தேன். நீங்கள் இப்படித் தூங்கியது சரியா?" என்று கேட்டார்.

"தம்பீ, தூங்குவதே ஓர் அபிப்பிராயந்தான்!" என்றார், பிரபல ஆசிரியர்.

—'காரொனெட்'

# கல்வித் துறைச் செய்திகள்

## 4-வது திட்ட காலத்தில் கல்வி வசதிப் பெருக்கம்

### பொதுக் கொள்கைகளைத் தேசிய அபிவிருத்திக் குழு ஏற்றது.

### ஆரம்பக் கட்டத்திலிருந்தே விஞ்ஞானப் பயிற்சிக்குச் சிபாரிசு

புதுடில்லி, பிப். 28—நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆரம்ப கல்வி வசதிகளை விஸ்தரிப்பது சம்பந்தமாகவும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாகவும் சில பொதுக் கொள்கைகளை தேசிய அபிவிருத்தி கவுன்சிலின் சமூக பணி பற்றிய கமிட்டி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

கமிட்டியின் இரு தின கூட்டம் நேற்று இங்கு முடிவடைந்தது. நான்காவது திட்டத்தில் ஆரம்பக் கல்விக்கான செயல் திட்டத்தை உருவாக்குவதில், பள்ளி நேரங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் ஸ்தல அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்போதுதான் வேலை நேரங்கள் ஸ்தல நிலவரங்களைப் பாதிக்காது.

ஆரம்பப் பள்ளி வகுப்புக்களில் இரண்டு ஷிப்டுகளை அமலாக்குவதும், பள்ளிகளில் மதிய உணவுக்கு வகை செய்வதும், அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வசதியளிக்க வேண்டும் என்ற அரசியல் சட்ட கட்டளை நிறைவேற விரும்பத்தக்கவை எனக்கருதப்பட்டது.

விஞ்ஞான போதனை ஆரம்பக் கட்டத்திலேயே துவக்கப்பட வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்தது. தொழில் கல்வி, முதியோர் கல்வி உட்பட வேறு சில யோசனைகளையும் கமிட்டி தெரிவித்தது.

சாத்யமான அளவு நான்காவது திட்டத்தில் புதிய சர்வகலாசாலைகளுக்கு வகை செய்யக்கூடாது என்பதையும், அதற்குப்பதில் கல்லூரிகள் அதிகமாக உள்ள பெரிய நகரங்களில் சர்வகலாசாலை கேந்திரங்களை நிறுவ வேண்டும் என்பதையும் கமிட்டி ஒப்புக்கொண்டது.

அகில இந்திய மொழிகளின் அபிவிருத்திக்காக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் மொழிக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது.

### விவாதம்

விவாதத்தின்போது திட்டக் கமிஷன் மெம்பர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் பேசுகையில் பிரைமரி ஆரம்பக்கல்வி இலக்குகளை ராஜ்யங்கள் உயர்த்த வேண்டும் என்று யோசனை தெரிவித்தார். ஆசிரியர்களுக்குக் கூடுதல் ஊதியமளிப்பதை அவர் ஆதரித்தார். தபால்மூலம் கல்விப்போதனையை பெருமளவில் அமலாக்குவதையும், கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் உயர்தர கல்வி

தாத்தை பேணிக் காக்க அதிக அளவு கவனம் செலுத்துவதையும் அவர் கோரினார்.

பள்ளிக்கட்டிடங்களில் தகுந்த சுகாதார வசதிகளைச் செய்வதன் மூலம் இளம் வயதிலிருந்தே பள்ளிகளில் குழந்தைகளுக்கு சுகாதார முறைகளைப் போதிக்க வேண்டும் என்று மத்ய சுகாதார மந்திரி டாக்டர் சுசிலா நய்யார் யோசனை தெரிவித்தார்.

விரயத்தைத் தடுப்பதன் அவசியத்தை கல்வி மந்திரி திரு.சாக்ளா வலியுறுத்தினார். பெண் கல்வி பரவ தனியார் ஸ்தாபனங்கள் பெருமளவு உதவ முடியும் என்றார்.

## ஆசிரியர் சம்பளத்துக்காக ராஜ்யங்களுக்கு உதவும் ஏற்பாடு

புதுடில்லி, மார்ச். 24 — ஆசிரியர்கள் சம்பளம் சம்பந்தமாக மத்திய சர்க்கார் 'மாட்சிங் கிராண்ட்' (ஈடு மானியம்) தருகிறது அல்லவா? அதற்குப் பதிலாக மாற்று திட்டங்களைக் கொண்டுவரலாமா என்று சர்க்கார் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகக் கல்வி அமைச்சர் திரு. சாக்ளா இன்று லோக சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

மத்திய சர்க்கார் அளிக்கும் மானியத்துக்குச் சமமாக, தாங்களும் மானியம் அளிக்க ராஜ்ய சர்க்காரால் நிதி வசதி காண முடியவில்லையாதலால், இந்த "ஈடு மானிய" முறை சரிவர செயல்படவில்லை என்றார். 3-வது திட்டத்தில் ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் மத்திய சர்க்கார் 50 சத விகிதம் உதவி வந்திருப்பதாக அவர் சொன்னார்.

பள்ளி ஆசிரியர் சம்பளத்துக்காக நிதி உதவி அளிக்கும் விஷயத்தில் உ. பி. யை விசேஷமாகப் பாவித்து நடத்துவதாகத் தாம் வாக்களித்திருப்பதாயும், ஆனால் ஆசிரியர்கள் நேரடி நடவடிக்கையை வாபஸ் பெற்றாக வேண்டும் என்பது அதற்கு முன் நிபந்தனை யாகுமென்றும் திரு. சாக்ளா சொன்னார். நேரடி நடவடிக்கை நீடிக்கும்வரை தங்களால் எதுவும் செய்வதிற்கில்லை என்றார்.

இந்தியாவிலேயே உ. பி. யில் தான் ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகக் குறைவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மாற்றியமைத்து சர்வ கலாசாலை கமிஷன் அனுப்பிவைத்துள்ள அறிக்கை தமக்குக் கிடைத்திருக்கிறதென்றார்.

## ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் தருவது அவசியம்

### ஆர்ச் பிஷப் வலியுறுத்தல்

சென்னை, மார்ச், 27— தியாகராய நகரில் வித்யோதயா பெண்கள் பள்ளியின் ஆண்டுவிழாவுக்

தலைமை வகித்து சென்னை—மயிலாப்பூர் ஆர்ச் பிஷப் ரெவ. டாக்டர் லூயிஸ் மாதியாஸ் பேசுகையில் ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் தருவதன் அவசியத்தையும், உயர்ந்த தரத்தைப் பேணிக் காக்க சில கல்வி ஸ்தாபனங்கள் கட்டணம் வசூலிப்பதன் அவசியத்தையும், மாணவருக்கு நன்னெறி போதனையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சென்ற ஆண்டு மத்திய சர்க்கார் நியமித்த கோத்தாரி கல்விக் கமிஷனுக்கு யாதாஸ்து ஒன்றைத் தாம் அனுப்பியதாகவும் ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் தருவதன் அவசியத்தையும் தாம் அதில் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மூன்றாந்தர நபர்கள் வேறு வேலை பெற முடியாமல் கடைசி முயற்சியாக ஆசிரியர் தொழிலை மேற்கொள்வதாலும், ஆசிரியர் தரம் மோசமாக உள்ளது என்று ஆர்ச் பிஷப் கூறினார். அறநெறி போதனையின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

## சில செகண்டரி பள்ளி ஆசிரியர் ஊதிய பிரச்னை

சென்னை, மார்ச், 27—சர்க்கார் மான்ய உதவி பெறும் செகண்டரி பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும் 1964 மார்ச் 31இல் அவர்கள் வாங்கிய சம்பளத்துக்கும், 1964 ஏப்ரல் 1 லிருந்து நிர்ணயிக்கப்பட்ட ஆசிரியர் மான்ய தொகைக்கும் (கிராண்ட்) இடையேயுள்ள வித்தியாசத்தை கொடுக்க இத்தகைய பள்ளிகளின் நிர்வாகத்தினருக்கு ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய இயலும் பொருட்டு அட்ஹாக் மான்யம் வழங்குமாறு சர்க்காருக்கு சிபாரிசு செய்யும் தீர்மானமொன்றைத் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி மேல்சபையில் கொண்டுவந்தார். தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. தீர்மானத்தை எதிர்த்து 21 வோட்டுகளும், ஆதரித்து 9 வோட்டுகளும் கிடைத்தன.

டாக்டர் ஏ. சிதம்பரநாதன், திரு. எம். ராஜா அய்யர், திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர், திரு. எம். சங்கரலிங்கம் ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்தனர்.

தீர்மானம்மீது நடந்த விவாதத்துக்கு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் பதிலளித்துப் பேசுகையில் சில பள்ளிகளின் நிர்வாகத்தினர், சில காரணங்களுக்காக தங்களது ஆசிரியர்களில் சிலருக்குக் கூடுதல் சம்பள உயர்வு அளித்துவந்ததை தருவதற்குச் சம்மதிக்குமாறு சர்க்காரை எதிர்பார்ப்பதற்கில்லை என்று குறிப்பிட்டார். இலவசகல்வி அமலுக்கு முன் ஆசிரியர்கள் வாங்கிய சம்பளத்துக்கு சர்க்கார் உத்தரவாதம் அளித்துள்ளது என்று முதலமைச்சர் சொன்னார்.

பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் தற்போது செயல்படுவதை ஆராய்ந்து அவற்றின் சீரமைப்புக்காக சிபாரிசுகளைத் தெரிவிக்க சட்டசபை மெம்பர்கள்கொண்ட

கமிட்டியொன்றை நிறுவ வேண்டும் எனக் கோரி தீர்மான மொன்றை திரு. எஸ். கே. சம்பந்தம் கொண்டுவந்தார். அடுத்த தனியார் தீர்மானத் தினத்தன்று இத் தீர்மானம்மீது விவாதம் நடக்கும்.

## கல்லூரிப் பரீட்சைகளுக்குத் தனியாக ஆஜராதல்

### அனுமதிக்க எஸ். வி. சர்வகலாசாலை முடிவு

திருப்பதி, மார்ச். 28—பி. யு. ஸி., பி. ஏ., பி. காம்., எம். ஏ., பரீட்சைகளுக்கு ஆசிரியர்கள் அல்லாத மற்றவர்கள் கல்லூரிகளில் சேராமல் தனியே படித்து ஆஜராக அனுமதிக்கலாம் என்று ஸிண்டிகேட் செய்த முடிவை ஸ்ரீ வெங்கடேசுவரா சர்வகலாசாலை அகாடமிக் கவுன்ஸில் கொள்கை அளவில் அங்கீகரித்துள்ளது. இந்த ஏற்பாட்டை அமலுக்குக் கொண்டுவர விதிகளில் அவசியமான திருத்தங்களை சிபாரிசு செய்யுமாறு நிரந்தர கமிட்டியிடம் கூறுவதென்றும் கவுன்ஸில் தீர்மானித்தது.

## மாலை கல்லூரிகள் பற்றி முதன் மந்திரி

சென்னை, மார்ச். 23—இன்று அசெம்பிளியில் உத்தேசிக்கப்பட்ட மாலைக் கல்லூரிகளைப்பற்றி முதல் மந்திரி பின்வருமாறு கூறினார்.

சென்னை அரசாங்க கலைக் கல்லூரியிலும், சென்னை மேரி ராணி கல்லூரியிலும், கோவையில் உள்ள அரசாங்க கல்லூரியிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் மாலை கல்வி கல்லூரிகளுக்கு இப்போதுள்ள ஆசிரியர்களின் சேவை பயன்படுத்தப்படும். ஏனெனில் புதிய விரிவுரையாளர்கள் கிடைப்பது கடினம். மேற்கூறிய கல்லூரிகளில் மாலை கல்லூரிகள் நடத்துவதில் ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு, இந்தத் திட்டத்தை ஜில்லாக்களுக்கு விஸ்தரிப்பது பற்றி ஆலோசனை செய்யப்படும்.

---

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

மலையுச்சியில் நிலையில் பிறழாமல் ஆற்றலைத் திரட்டி வைத்துக் கொண்டு நிற்கும் கற்களின் இயல்பை மனத்துட்கொண்டே வள்ளுவரும்,

"குணமென்னும் குன்றேறி
நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

—என்ற அழகிய குறளை அமைத்துள்ளார். குணக்குன்றின் உச்சியில் நிற்கும் சான்றோர் எவர் மீதும் சினம் கொள்ளார். ஆனால் ஒருகால் சினம் கொண்டாலோ அந்தச் சினம் சிறிதுகாலமே இருந்தாலும்கூட ஏற்படும் விளைவினை எவராலும் தாங்கிக்கொள்ள முடியாது.

—"நவ இந்தியா"

*நீக்ரோக்களுக்கு விடுதலை வழங்கிய விவேகி ஆபிரகாம் லிங்கனின் நினைவுபற்றிய வரலாற்றுக் குறிப்பேடு இது. சுவையுங்கள்; பிறரையும் சுவைக்கச் செய்யுங்கள்.*

# அடிமைத் தளையை அறுத்த ஆபிரகாம் லிங்கன்

இந்திய மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர் ஆபிரகாம் லிங்கன். அவர் நினைவாக இந்தியாவில் சிறப்புத் தபால் தலை வழங்கப்படுகிறது. மரக் குடிசையில் பிறந்து ஜனாதிபதி மாளிகையில் வீற்றிருக்கும் சிறப்பு பெற்றது கற்பனைக் கதை போன்ற அவருடைய வாழ்க்கை, நீக்ரோக்களின் அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து அவர் வெளியிட்ட அடிமை விடுதலைப் பிரகடனம், கெட்டிஸ்பெர்க்கில் அவர் ஆற்றிய அழியாப் புகழ்பெற்ற உரை, அவருடைய மனிதப் பண்பு, எதிரிக்கும் கூட அவர் காட்டிய கருணை, முதலிய அருங்குணங்களுக்காக அவரை மக்கள் போற்றுகின்றனர்.

ஒரு வெறியனின் குண்டுக்கு இரையாவதற்குச் சில வாரங்களுக்கு முன்புதான் அவர் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவி ஏற்று உரை நிகழ்த்தினார். சொற்றிறமிக்க இந்த உரையில் எல்லையற்ற பரிவும் கருணையும் இருந்தன.

"ஒருவர் மீதும் நமக்குத் தீய எண்ணம் வேண்டாம்; அனைவரிடமும் அன்பு பாராட்டுவோம்; கடவுள் நமக்கு அருள்வதற்கேற்ப, நியாயமென்று தோன்றும் நெறியில் உறுதியாய் நிற்போம்; இத்தகைய உள்ளத்தோடு நாம் நம் கையில் உள்ள வேலையைச் செய்து நிறைவேற்ற முனைவோமாக; நாட்டின் புண்களை ஆற்றவும், போரிட்ட வீரனைப் பேணிக் காக்கவும், வீரனை இழந்து விதவையான அவன் மனைவியையும், தந்தையையிழந்து தனித்த அவன் மக்களையும் கவனித்துக் காக்கவும் நாம் ஈடுபட்டு முயல்வோமாக—நியாயமானதும் நிலை பெறுவதுமான சமாதானம் நமக்குள்ளும் பிற நாடுகளுடனும் உண்டாகவும் அது பேணி வளர்க்கப்படவும் உகந்த யாவற்றையும் செய்ய நாம் முயல்வோமாக."

உள்நாட்டுப் போருக்குப் பிறகு மனக் கசப்பும், மனச்சோர்வும் உளைச்சலும் ஏற்பட்டன; ஆனால் லிங்கன் கண்ட கனவுகளும், நம்பிக்கையும் அவருடன் மக்கி மடிந்து விடவில்லை. போற்றி வணங்குவதற்குரிய ஒரு பெரு மகானை மட்டும் அவர் இருந்து விட்டுப் போகவில்லை. பின்பற்றுவதற்கு வழியைக்காட்டி விட்டு மட்டும் அவர் செல்லவில்லை. வருங்காலம் எத்தகையது, எப்படியிருக்கும்; தேசிய இலட்சியம்

யாது என்ற உணர்வையும் ஊட்டி விட்டுத்தான் சென்றார் அவர். பிளவுபட்டுத் தள்ளாடிக் கொண்டிருந்த மக்களுக்கு அவர்களுடைய இலட்சியங்களை மீண்டும் உணர்த்தி அவற்றைப் பேணும் படி பணித்துச் சென்றார்.

## வனாந்தரத்தில்

கென்டக்கி வனாந்தரத்தில் வறுமைமிக்க சூழ்நிலையில் தொடங்கியது ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை. அவர் உள்ளம் வளர்ச்சியடைகையில், அடிமை முறை கொடியது, நெறியற்றது, பாவமானது என்று உறுதியாக நம்பலானார். 1855–ம் ஆண்டில் அவர் மனக் கசப்புடன் நண்பர் ஒருவருக்குக் கீழ்க்கண்டவாறு எழுதினார்: "சீர்கேட்டை நோக்கி நமது முன்னேற்றம் மிக வேகமாக இருப்பதுபோல் எனக்குத் தெரிகிறது. படைப்பால் மக்கள் அனைவரும் ஒன்றே என்று பிரகடனம் செய்து நாம் சுதந்திர மக்கள் என்ற பேற்றைப் பெற்றோம். இப்பொழுது, 'நீக்ரோக்கள்' நீங்கலாக, படைப்பால் மக்கள் அனைவரும் ஒன்றே என்று தான் அப்பிரகடனத்தை வாசிக்கிறோம்."

நூறு ஆண்டுகள் கழிந்தும் கூட, அடிமைகளுக்கு விடுதலை தந்த இப்பெருந்தகையின் உணர்ச்சிதான் அமெரிக்காவில் இனச் சமத்துவப் போராட்டத்திற்குப் பக்க பலமாக இருக்கிறது. வாஷிங்டன் நகரத்தில் இருக்கும் லிங்கன் நினைவுச் சின்னத்தின் முன்புதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டரை லட்சம் அமெரிக்கர்கள் கூடி நீக்ரோ போராட்டத்திற்கு ஆதரவை, திறன் மிக்க வழியில் உணர்த்தினர். நாடு நெடுகிலும் எல்லா இனத் தலைவர்களும் சேர்ந்த மாபெரும் கூட்டம் அது.

ஆனால் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவுக்கு மட்டும் சொந்தமில்லை. உலகில் எல்லாவிடத்தும் இருக்கும் சுதந்திரப் பிரியர்களுக்கும் அவர் சொந்தம்; அடக்கு முறையையும் அநீதியையும் எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் அவர் சொந்தம்.

பண்டிட் ஜவாஹர்லால் நேரு போற்றிய அமெரிக்கத் தலைவர் ஆபிரகாம் லிங்கன். உலகம் முழுவதிலும் ஆபிரகாம் லிங்கன் போற்றப்படும் காரணத்தை ஆராயப் புகுந்தார் நேரு சில ஆண்டுகளுக்கு முன். "ஆபிரகாம் லிங்கன் உலகம் போற்றும் வெகு சில பெருமகனார்களில் ஒருவர். உலகின் உள்ளக் கிடக்கையை பிரதிபலித்தவர்கள் இவர்கள். உலக மக்கள் போற்றிப் பேணும் சில இலட்சியங்கள் இவர்களிடம் விளங்கின; இவ்விலட்சியங்களின்படி உலகம் நடக்க முயலுகிறது; ஆனால் அது வெற்றி பெறுவது இல்லை" என்று கூறினார் நேரு.

"லிங்கன், சாதாரண பாமர மனிதனைவிட மேம்பட்டவர்; ஆயினும் அவர் சாதாரண மனிதனைப் போலவே இருந்தார். போர்க் களத்துப் போர் வீரனைப்

போல் இருந்தார்; ஆயினும் அவனைவிட மேம்பட்டவராகத் திகழ்ந்தார்; இலட்சியங்களில் தீவிரப் பற்றுக் கொண்டிருந்தவராயினும், அவற்றிற்கு உழைத்து வந்தவராயினும் பரபரப்பு ஏதுமின்றி அமைதிமிக்கவராக இருந்தார். வெற்றி தோல்வி தம்மைப் பாதிக்கவிடவில்லை.

“சுதந்திரம், தனி நபர் சுதந்திரம் என்பது இன்னும் உலகில் பெரும் பிரச்சினையாக இருக்கிறது....ஆனால் லிங்கன் அன்றைக்கே அதற்கு உறைவிடமாகத் திகழ்ந்தார். “இந்நாடு சுயேச்சையால் உருவான நாடு; மக்கள் அனைவரும் படைப்பில் சமமானவர் என்ற கொள்கைக்காகவே வாழவேண்டும் என உறுதி பூணப்பெற்ற நாடு” என்று அவர் நிகழ்த்திய புகழ் பெற்ற உரையில் இக்கருத்து மிளிர்கிறது. ஒரு நாடல்ல, உலகில் ஒவ்வொரு நாடுமே சுயேச்சையில் உருவாகி அக்கொள்கைக்காக வாழட்டும்” என்றார் நேரு.

19-வது நூற்றாண்டுத் துவக்கத்தில் அமெரிக்காவில் இருந்த கடின வாழ்க்கையை அவர் வெளித்தோற்றம் பிரதிபலித்தது; ஆயினும் அவர் முகம், பரிவு, இரக்கம், நல்லுணர்வு, நகைச் சுவை, பண்பாடுடைய பெருமகனின் குணங்களை வெளிக்காட்டவே செய்தது.

வறுமையில் வளர்ந்தவர்; முறையான பள்ளிப் படிப்பற்றவர். ஆயினும் என்ன! சொற்றிறன் மிக்க நாவன்மை படைத்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், அமெரிக்காவின் ஜனாதிபதியாகவும் ஆனார் லிங்கன். ஏமாற்றங்கள் தோல்விகள் ஏற்பட்டும், அஞ்சாது, கலங்காது நின்றார். மிகச் சிறந்த அமெரிக்க ராஜதந்திரிகளில் ஒருவராக, பெரும் மதிப்புக்கும், அன்புக்கும் பாத்திரமாகத் திகழ்ந்து மக்களால் போற்றப்பட்டார்.

கென்டக்கியில் 1809 பிப்ரவரி 12-ம் தேதி லிங்கன் பிறந்தார். ஏழாவது வயதில் குடும்பம் இன்டியானாவுக்குக் குடி பெயர்ந்தது. அங்கு பத்தாண்டு விட்டு விட்டு பள்ளி சென்றார் லிங்கன். குடும்பப் பண்ணையில் வேலை செய்யவே அவருக்கு நேரம் சரியாக இருந்தது; ஆயினும் கையில் கிடைத்த ஒவ்வொரு புத்தகத்தையும் விடாமல் படித்து வந்தார்; ஒரு புத்தகம் இரவல் வாங்கப் பல மைல்கள் நடந்து போய் வருவதும் உண்டு. அடிக்கடி அவ்வாறு செய்வார்.

இல்லினாய்ஸ் மாநிலச் சட்ட மன்றத் தேர்தலுக்கு நிற்க 1832 வசந்த காலத்தில் முடிவு செய்தார். அதுவரை பலவேறு சில்லறை வேலைகளைச் செய்து வந்தார். தேர்தலில் தோற்றாராயினும், 1834-ல் மீண்டும் முயன்று வெற்றி பெற்றார். அதற்குப் பிறகு மூன்று தடவை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சட்ட மன்ற உறுப்பினர் ; வழக்கறிஞர்

சட்ட மன்ற உறுப்பினராக இருக்கையிலேயே, வழக்கறிஞ

ராகவும் தொழில் செய்து வந்தார். தொழிலில் புகழ் வந்தடைந்தது. ஒரு நீதி மன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்குச் சென்ற வண்ணமிருந்தார். சொற்றிறன் மிக்க பேச்சாளர்; திறமையான வழக்கறிஞர். நியாயமான வழக்கு என்று தமக்குத் தோன்றியவற்றை மட்டுமே அவர் ஏற்று வந்தார்.

1847–ல் விக் கட்சியின் உறுப்பினராக யு. எஸ். பிரதிநிதி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமை முறையை ஒழிக்க வாஷிங்டனில் அவர் மிகக் கடுமையாகப் போராடினார். 1849–ல் தேர்தலுக்கு நிற்கவில்லை. பெருகி வந்த தமது குடும்பத்தையும் தந்தையையும், மாற்றாந்தாயையும் காப்பாற்ற வழக்கறிஞர் தொழிலுக்குத் திரும்பி வர விரும்பினார் லிங்கன்.

1855–ல் விக் கட்சியின் உறுப்பினராக யு. எஸ். செனட் சபைத் தேர்தலுக்கு நின்று தோற்றுப் போனார். 1858–ல் இல்லினாய்ஸ் குடியரசுக் கட்சியின் சார்பில், யு. எஸ். செனட் சபைத் தேர்தலுக்குஸ்டீஃபன் ஏ. டக்ளஸ் என்பவருக்கு எதிராக நிறுத்தப்பட்டார். தொடராக நடந்த பல விவாதங்களில் இருவரும் சந்தித்தனர். அடிமைகளை வைத்துக் கொள்ள வேண்டுமா என்று முடிவு செய்யும் உரிமை மக்களுக்குத்தான் இருக்கிறது என்று டக்ளஸ் வாதிட்டார். ஆனால் லிங்கன், நெறியற்ற தீமையான அடிமை முறை ஏற்கெனவே இருந்து வரும் மாநிலங்களில் மட்டுமே இருக்க, மக்களின் உரிமையை மட்டுப்படுத்த வேண்டும் என்று யு. எஸ். சட்ட மன்றத்தில் வாதாடினார். தேர்தலில் டக்ளஸ் வென்றார்; ஆனால் ஜனாதிபதியாக வரும் மாபெரும் கவுரவத்தை லிங்கன் அடைந்தார்.

## உள்நாட்டுப் போர்

அமெரிக்காவின் 16–வது ஜனாதிபதியாக லிங்கன் 1860 நவம்பர் 6–ந் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார். யூனியனை விட்டுப் பிரிந்த தென் மாநிலங்கள் அடங்கிய கான்ஃபெடரஸீ 1861 ஏப்ரல் 12–ந் தேதி உள்நாட்டுப் போரைத் தொடங்கியது; தென் கரோலினாவில் ஸம்ட்டர் கோட்டைக்கு மேல் பறந்து கொண்டிருந்த யூனியன் கொடி மீது அது சுட்டது.

யூனியனைக் காப்பாற்றுவது தான் போரின் முதல் இலட்சியம் என்று லிங்கன் கருதினாலும் அடுத்தபடியாக வருவது அடிமை முறை ஒழிப்பு என்பதை 1862 வாக்கில் அவர் உணர்ந்தார். 1862 செப்டம்பர் 22–ம் தேதி அவர் நீக்ரோ அடிமைகளை விடுதலை செய்யும் பூர்வாங்கப் பிரகடனத்தை வெளியிட்டார். 1863 ஜனவரி முதல் தேதியன்று கான்ஃபெடரேட் ராணுவ ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் பிரதேசங்களில் இருக்கும் அடிமைகள் அனைவரும் “அச்சமயத்திலிருந்தும் இனிமேல் என்றென்றும்” விடுதலை செய்யப்பட்டவர்

களாக அமெரிக்க அரசாங்கத்தால் கருதப்படுவர் என்று இந்தப் பிரகடனம் அறிவித்தது. 1865-ம் ஆண்டு அடிமை முறை ஒழிப்பு அரசியல் சட்டத்திற்குச் செய்யப்பட்ட 13-வது திருத்தத்தின் மூலம் நாடு நெடுகிலும் அமல் செய்யப்பட்டது.

1864-ல் லிங்கன் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1865 ஏப்ரல் 9-ம் தேதி, பிரதான கான்ஃபெடரேட் சேனை வர்ஜீனியாவில் அப்போமாட்டக்ஸ் என்ற இடத்தில் சரண் அடைந்தது. 1865 ஏப்ரல் 14-ம் தேதி மாலை, வாஷிங்டன் நகரில் ஃபோர்டு தியேட்டரில் லிங்கன் தமது மனைவியுடன் ஒரு நாடகம் பார்த்துக் கொண்டிருக்கையில், ஜேம்ஸ் வில்க்கிஸ் பூத் என்பவன் அவரைச் சுட்டான். மறுநாள் காலை அவர் காலமானார்.

போர் இலாகாக் காரியதரிசி ஸ்டான்டன், லிங்கனின் உற்ற நண்பர். லிங்கனின் படுக்கைக் கருகில் இருந்தவர்களிடம் "அவர் இப்பொழுது அமரராகி விட்டார்" என்று ஸ்டான்டன் மெல்லக் கூறினார்.

---


# புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி. B. A., L. T.,

Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**



Edited Printed and Published by, P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2/ 65, Broadway, Madras-1.